www.tamilarangam.net



# ஈழச்செய்தி

EPIC

ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம். த.பெ. இல. 5551 சென்னை 94.

கடிதம் 33

ஜனவரி-பெப்ரவரி-86


- ★ குரங்கும் ரிகர் தட்டும்!
- ★ சுந்தரம், தேவன், ஜெகன், மனோமாஸ்டர், ரேகன் வரிசையில் மற்றுமொரு ஈழப் போராளி!
- ★ அராஜகத்திற்கு முற்றுப்புள்ளி!
- ★ முற்றுகை! தேடுதல் வேட்டை! சோதனை!வதை! சுட்டுக்கொலை! சூறையாடல்!

போராடும் மக்களை அணி திரட்டுவோம்!
அணி திரளும் மக்களைப் போராட அழைப்போம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குரங்கும் "ரிகர்" தட்டும்.....!

## யாருக்கெதிராக என்பதில்தான் மனிதன் வித்தியாசப்படுகின்றான்!

ஆசிரியர் குறிப்புரை



சிறிலங்கா அரசின் தேசிய இன ஒடுக்குமுறையின் உச்சக் கட்டமான இன்றைய கால கட்டத்தில்:

ஆயுதங்களினால் அடக்கிவிட முடியாது, நவீன தந்திரோபாயங்களைக் கொண்டு ஈழப் போராட்டத்தை நசுக்கிவிட JR அரசு முனைந்து கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில்;

"மக்களுக்காகப் போராடுகின்றோம், மக்களைக் காக்க ஆயுதம் ஏந்தினோம்" என்றெல்லாம் சொல்லிக் கொள்பவர்கள் **(உண்மையாகவே சொல்பவர்கள்) ஒன்றுபட்டு நின்று ஐக்கியத்தைப் பலப்படுத்தி பொது எதிரிக்கெதிராக** ஆயுதங்களை ஏந்த வேண்டிய இன்றைய சூழ்நிலையில்;

சக இயக்கங்களோடு காடைத்தனமான மோதல்களில் குதிப்பதும்; நடைமுறைப் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்று தெரியாமல் **தொட்டதிற்கெல்லாம் "ரிகர்" தட்டத் தொடங்குவதும்;** கூட இருந்து கொண்டு குழிபறிப்பதும்; முதலாளிகளிடம் "ஆதரவாளர்கள்" என்ற முத்திரை குத்தி கப்பம் வாங்கிவிட்டு அவர்கட்கு "ஆயுத பாதுகாப்பு" கொடுப்பதும்; **அப்பட்டமான பொய்ப் பிரச்சாரங்களைக் கடலுக்கப்பால் உள்ள மக்களுக்கு முன்னால் கட்டவிழ்ப்பதும்;** சக விடுதலை இயக்கங்களை கண்டு பொறாமைத் தீயில் வெந்து நோவதும்; தோழமை அமைப்புக்களிலுள்ள **'பலசாலிகளைக் கொன்றே—தாம்—படுசாமர்த்திய சாலிகள்'எனப் பறைசாற்றிக் கொள்வதும்;** கையாலாகாச் சிறுமைத்தனம் மட்டுமல்ல, சிறிலங்கா அரசின் நடவடிக்கைகட்கு எந்த வகையிலும் தரங்குறைவானதல்ல என்பதைக் காட்டிக் கொள்வதோடு; மக்கள் மத்தியில் குழப்பத்தையும், எதிரிக்கு சாதகத்தையும் ஏற்படுத்திவிடும் என்பதில் ஐயமில்லை!

### அண்ணனைப் போல் .....?

"தமிழீழம் பெற்றுத் தருவோம்" என்று வார்த்தை ஜாலங்களை அள்ளிவீசி **தங்களைக் கதாநாயகர்களாகக் காட்டிக்கொண்டு அரசியல் நாடகமாடிய "அண்ணன்" மார்களையும் ஈழ மக்கள் அறிவர். மாயையில் மதிமயங்கிக் கிடந்து காலத்தின் விடியலில் அவர்கள் மக்களால் தூக்கியெறியப்பட்டதும் ஓர் உண்மையான ஈழ வரலாற்றுச் சான்று!** இதையும் மக்கள் அறிவர்.

**சாதனைகள் என்பது வெற்றிக்கு அவசியமே! ஆனால் சர்க்கஸ் அல்ல விடுதலைப் போராட்டம்"** சர்க்கஸ்காரர்கள் தீர சாகச விளையாட்டுக்களில் திறமை சாலிகள்தான். ஆனால் உலகத்திலுள்ள அத்தனை சர்க்கஸ்காரர்களையும் ஒன்று திரட்டினால் கூட அவர்கள் ஒரு தேசத்தின் விடுதலையை வென்றெடுத்துவிட முடியாது.

ஈழ விடுதலை அமைப்புக்கள் அனைத்தையும் பத்திரிக்கையாளர்கள் "விடுதலைப் புலிகள்" என்று பாவிப்பதையும்; "விடுதலைப் போராளிகள்" என்று தங்களை அறிமுகப் படுத்திக்கொள்ளும் இயக்கங்களின் பொறுமையையும், ஐக்கியத்திற்காக இழப்புக்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் நற்பண்புகளையும்; தமது சுயநல நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் "ஒரு சிலரைப் பார்க்கும் போது......

...இப்படித்தான் கடந்த காலத்தில் விடுதலைப் போராளிகளின் உடல் மீது தங்கள் கட்சிக் கொடியைப் போர்த்திவிட்டு செத்த உடல்கள் மீது சத்தியம் செய்துவிட்டு மக்களை ஏமாற்றி வாக்குச் சேர்த்த **'அண்ணன்' மார்களின் நினைவு வருகின்றது!**

### ஹீரோயிச மாயைகளைக் கிழித்தெறிவோம்

எதிரியார்? நண்பன் யார்? என்று தெரியாமல் தொட்டதிற்கெல்லாம் துப்பாக்கியைத் தூக்குவது என்பது வெறும் சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கையே காட்டும் என்பது மட்டுமல்ல; இது சினிமாவில் வரும் கற்பனைக் கதாபாத்திர ஹீரோயிச தன்மைகளையே பிரதிபலிக்கும்!

இதைவிட இன்றைய காலகட்டத்தில் இராணுவத்தினரின் கண்மூடித்தனமான ஹெலிக்காப்டர் தாக்குதலைச் சமாளிக்க; விரும்பியோ, விரும்பாமலோ ஆயுதம் தாங்கியுள்ள சகல இயக்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து பொதுத்தாக்குதல் மேற்கொள்ள வேண்டிய ஓர் வலுக்கட்டாய இக்கட்டான நிர்ப்பந்தத்திற்குள் உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்பதும், அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கின்றது என்பதும் சகலரும் அறிந்த விடயம். இந்நிலையில் **சக இயக்கங்களின் உதவியையும் பங்களிப்பையும் ஊதாசீனம் செய்து "மார்க்கெட்டு தேடிக் கொள்ள மார்தட்டிக் கொள்வது"** என்பது ஓர் வெட்கக் கேடான விடயமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனவே "நான் திறமைசாலியாக இருக்க வேண்டும்" என்பதை விட்டுவிட்டு "நான் மட்டும் திறமைசாலியாக இருக்கவேண்டும்" என்ற ஹீரோ யிசக் கதாபாத்திரங்களுக்கு **வரலாறு கற்றுத்தந்த பாடங்களும் பரிதாபங்களும் ஏராளம்!**

இராணுவக் கட்டுப்பாடு, ஒழுக்கம் பற்றி **தங்களுக்குத் தாங்களே** புழுகிக் கொண்டு (அதுசரி... ஒருவரின் ஒழுக்கம், கட்டுப்பாடு பற்றி மற்றவர் களல்லவா சொல்ல வேண்டும்) அழகாக "ஆப்செட்" இல் அச்சுக் கோர்த்தவர்களின் சுய ரூபங்கள் மீண்டும் மீண்டும் வெளிப்படத் தொடங்கி யுள்ளன. தங்களுக்கே உரித்தான கொலைவெறிக் கோரத் தாண்டவங்களிலிருந்து இன்னும் அவர் களால் விடுபட முடியவில்லை. என்பதற்கு ஈழ மண்ணில் புதையுண்ட எத்தனையோ போராளி களின் சமாதிகள் சான்று! (ஆம்! உண்மைகள் உறங்குவதில்லை தான்)

"மக்கள் விரோத சக்திகள்" விடுதலை இயக் கங்கள் என்ற பெயரில் தலை தூக்குவது ஒன்றும் புதிய விடயமல்ல! புரியாத விடயமுமல்ல! உலக வரலாற்றில் எத்தனையோ!

எனவே **ஹீரோயிச மாயைகளை மக்கள் மத்தி யில் அம்பலப்படுத்தி, மனிதப் பண்புகளையே குழி தோண்டிப் புதைக்கும் அராஜகவாதிகளின் அடாவடித் தனங்களை அடக்கி விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கிய பாதையில் செலுத்த வேண்டும் என் பதை முற்போக்கு சக்திகள் முதலில் தெட்டத் தெளி வாகப் புரிந்து கொள்ள வேண்டும். களத்து மேட்டில் காட்டுமிராண்டித் தனமான வேட்டைகள் களையப்பட வேண்டும்!**

**தற்காலிக மாயையில், கவர்ச்சியில் மக்கள்மயங்காது; தங்கள் வாழ்வையும், எதிர்காலத்தையும் ஒரு தூர நோக்குப் பார்வையுடன் சிந்திக்க வேண்டும்!**

**முளைவிட்ட அரும்பைக் கிள்ளிய முனைப்பில்;
கிளைவிட்ட மரத்தைக்
கிள்ள நினைப்பது முட்டாள்தனம்!**

*வாழ்க. ஈழம்!*
*வெல்க. ஈழ மக்கள் விடுதலைப் போராட்டம்!*
*ஓங்குக. ஒற்றுமை!*
*ஒழிக. அராஜகம்!*

★

## சுந்தரம், தேவன், ஜெகன், மனோமாஸ்டர், றேகன், வரிசையில் மற்றுமொரு ஈழப்போராளி தோழர் அமீன் (ஜெகன்நாதன்)!

**EPRLFஇனால்,**
**ஆயுதங்களுடன் 5 புலிகள் கைது!**
**EPRLFஇன் "மக்கள் விடுதலைப் படை" முகாமைத் தாக்கிவிட்டு தப்பி ஓடிய இருபுலிகள் TELO இனால் கையும் மெய்யுமாகக் கைது!**
**EPRLFஐச் சேர்ந்த பெண்கள் மூவர் புலிகளினால் கடத்தல்!**

மக்கள் மத்தியில், புலிகள் இயக்கம் பொது மன்னிப்புக் கேட்க வேண்டும்
—EPRLF

*பெப்ரவரி 19 :* மாலை சுதுமலை பகுதியில் சிறிலங்கா இராணுவம் மக்களைத் தாக்கியதிற்குப் பதிலடி கொடுக்கு முகமாகவும், எச்சரிக்கை செய்யும் முகமாகவும் EPRLF இன் இராணுவப் பிரிவான PLA தோழர்கள் தோழர் அமீனின் தலைமையில் யாழ் கோட்டை இராணுவ முகாமைத் தாக்குவதற்காகச் சென்று கொண்டிருந்தனர்.

வழியில் நின்ற LTTE (பிரபாகரனைத் தலைவ ராகக் கொண்ட இயக்கம்) **இனரிடம் அவர்கள் தம்மை அடையாளம் காட்டி விபரங்களைக்கூறி விட்டு,** தடயங்களிலுள்ள ஏனைய LTTE குழுவினர்களுக்கும் தெரியப்படுத்துமாறு (வாக்கி டோக்கி மூலம்) கூறி விட்டு சென்று கொண்டிருந்தனர்.

அவர்கள் சென்று கொண்டிருந்த வேளை சுமார் 50 யாருக்கு முன்னாலிருந்து அடுத்த LTTE குழுவினர் PLA உறுப்பினர்களுக்குத் தலைமை தாங்கிச் சென்றவரும் சர்வதேசப் பாசறை ஒன்றில் பயிற்சி பெற்ற ஆற்றல் மிகு தோழர் அமீனை **நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்து எதிர் பாராத விதமாகப் படுகொலை செய்தனர்.**

இச் சம்பவத்தைத் தொடர்ந்து புலிகள் உறுப் பினர்கள் 5 பேர் ஆயுதம் சகிதம் EPRLF போராளி களினால் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. பின்னர் அதில் இருவரை விடுதலை செய்தனர். அதன் பின் LTTE (புலிகள் இயக்கம) EPRLF இடம் மன்னிப்புக் கேட்ட போது **மக்கள் மத்தியில் பொது மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று** EPRLF **வேண்டுகோள் விடுத்தது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின்னர் LT யுடன் ஏற்படுத்தப்பட்ட சில நிபந்தனை, பேச்சு வார்த்தை, மன்னிப்பு, மனிதாபிமானம் என்பவற்றின் அடிப்படையில் மீதி மூவரையும் PLA விடுதலை செய்தது.

இதன் சில மணி நேரத்தின் பின் இரவு ''மக்கள் விடுதலைப் படை''யின் தள மொன்றைப் புலிகள் சுற்றி வளைத்துத் தாக்க முற்பட்டன. PLA துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது புலிகள் ஓடி விட்டன. சில புலிகளுக்குக் காயம் ஏற்பட்டன. PLA இன் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது ஓடிய **இரு புலிகளை TELO இயக்கத்தினர் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.** தாங்கள் பிரபாகரன் குழுவைச் சேர்ந்த ''புலிகள்'' என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

இச் சம்பவங்களின் பிற்பாடு PLA தளபதி தோழர் தேவாவும், தோழர் சுரேசும் காரியாலயத்தை மேற்பார்வையிடுவதற்காகச் சென்ற போது LT இனர் மறைந்திருந்து வழியை மறித்து தாக்குதல் நடத்த முற்பட்டனர். தோழர் தேவாவைக் குறி பார்த்துச் சுட்டனர். இதனால் தோழர் தேவாவுக்குப் பக்கத்தில் நின்ற தோழர் யசீர் காயமடைந்தார். இதைத் தொடர்ந்து ஆஸ்பத்திரிக்குச் சென்று வந்த, EPRLF ஐச் சேர்ந்த **பெண்கள் மூவரைப் புலிகள் கடத்திச் சென்றன.**

இதன் பின் அதிகாலை 4. மணி வரை EPRLF இன் ''மக்கள் விடுதலைப் படை'' முகாம்களை LT இனர் சுற்றி வளைப்பதும் எதிர்த்துச் சுடும் போது உயிர் தப்பி ஓடுவதுமாக இருந்தனர்.

இச் சம்பவங்களினால் இரு பக்கமும் பலர் காயமடைந்தனர். சிலர் உயிரிழந்தனர். **அராஜகமும் அடாவடித்தனமும் நிறைந்த புலிகள் மீது இப்போது மக்கள் கொதித் தெழுந்துள்ளனர்.**

ஈழ மண் இழந்து விட்ட ஈழப் போராளி தோழர் அமீனின் இறுதி ஊர்வலத்தின்போது ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட அஞ்சலிக் கூட்டத்தில் **தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) தமிழீழ விடுதலைக் கழகம் (PLOT) ஆகியவை கலந்துகொண்டன. இறுதியில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் க. பத்மநாபா அஞ்சலியுரை நிகழ்த்தினார்.** □

---

## அமெரிக்க ஆலென் தம்பதிகள், ஜெயவர்த்தனாவுக்கு கடிதம்!

1984ம் ஆண்டு EPRLFஇனால் கடத்தப்பட்ட ஆலென் தம்பதிகள்: வடக்கு கிழக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தை அகற்றுமாறும், தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளைத் தீர்த்து வைக்குமாறும் சிறிலங்கா அரசுக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பசுத்தோல் போர்த்திய புலிகளின் பகல் கனவு கலைகிறது...!

### சுந்தரம், தேவன், ஜெகன், மனோமாஸ்டர், றேகன் வரிசையில் மற்றுமொரு ஈழப் போராளி...!

### மிருக படையின் மிலேச்சத்தனம்!!!

—**EPRLF அறிக்கை**

பெப்ரவரி 19ம் திகதி ''எமது மக்கள் விடுதலைப் படை'' (PLA) ஆனது கோட்டை இராணுவ முகாமைத் தாக்கச் சென்றபோது விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் திட்டமிட்ட ரீதியில் எமது பொறுப்பு வாய்ந்த ஆற்றல்மிகு தோழர் அமீன் (ஜெகநாதன்) அநாகரீகமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

★ **EPRLF உறுப்பினர்கள் வந்து கொண்டிருந்த விடயம் LTTE இன் முதல் தடயக் குழுவினருக்கு அறிவிக்கப்பட்டு அடுத்த தடயத்திலுள்ளவர்கட்கும் அறிவிக்குமாறு சொல்லப்பட்ட பின்னரே EPRLF உறுப்பினர்கள் சென்றனர்.**

★ **அடுத்த தடயத்திலுள்ளவர்கள் எதுவித முன்னெச்சரிக்கையும் செய்யவில்லை! மாறாக EPRLF உறுப்பினர்கள் செய்த சமிக்கைகளை அலட்சியப் படுத்தியுள்ளனர்.**

★ **சுடப்படும் சமயத்தில் தாங்கள் யார் என்பதை அறியக்கூடிய போதுமான வெளிச்சத்திலேயே EPRLF உறுப்பினர்கள் நின்றுள்ளனர்.**

★ **கண்காணிப்பில் நிற்கும் எந்தவொரு இயக்கத்தினரும் பல முன்னெச்சரிக்கைச் சமிக்கைகளுக்குப் பின்பே தான் துப்பாக்கிப் பிரயோகம் செய்வார்கள். ஏனெனில் சிலவேளை பொது மக்கள் கூட வரலாம்.**

★ **அண்மைக் காலமாகத் தரைமார்க்கமாக இராணுவத்தினரால் ஊடுருவ முடியாத காரணத்தினாலேயே ஹெலிக்கொப்டர் மூலமாக ஆகாய மார்க்கமாக இராணுவம் தாக்குதல் நடத்துவது உலகம் அறிந்த விடயமே! இந்நிலையில் இராணுவத்தினர் வந்ததாக நினைத்ததாகக் கூறுவது என்பது ''முழுப் பூசணிக் காயைச் சோற்றுக்குள் மறைக்கும் விடயமே''**

★ **EPRLF உறுப்பினர்கள் சாதாரண உடையிலேயே சென்றிருந்தனர். (அவர்கள் இப்படி அடிக்கடி சென்று இராணுவக் கோட்டைக்கு மோட்டார் பீரங்கித் தாக்குதல் நடத்துவது கூட ஒன்றும் புதிய விடயமல்ல) (அது LTTE இனருக்குத் தெரியாத விடயமுமல்ல)**

★ **சில மாதங்களுக்கு முன்புதான் EPRLF இன் மக்கள் விடுதலைப்படை வன்னிப்பிராந்திய தளபதி தோழர் றேகன்; பிரபாகரன் குழுவினரால் திட்டமிட்ட ரீதியில் படுகொலை செய்யப்பட்டு... அப்பட்டமான பொய்யும் புரட்டையும் கட்டவிழ்த்து......... புண்பட்ட நெஞ்சத்தில் புதுக்காயமாய்......**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



★ மேலும், ஈழ வரலாற்றில்...தன்னைவிட யாரும் மிஞ்சிவிடக்கூடாது என்ற இறுமாப்பில்; இலட்சியக் கனவுகளோடு எழுந்த எத்தனையோ திறமை மிக்க தான, ஓர் இயக்கத்தைக் கட்டியமைத்து வழிநடத்தக் கூடிய போராளிகள் ...சுந்தரம்...ஒபரேய் தேவன்!... ஜெகன்...! மனோமாஸ்டர்...?

......இப்படி... இரத்தக் கறைபடிந்த சான்று களைப் பார்க்கும்போது......

எமது "மக்கள் விடுதலைப் படை" யின் ஆற்றல் மிகுந்த போராளிகள் தோழர் றேகன் (இன்பராஜா), தோழர் அமீன் (ஜெகன்நாதன்) ஆகியோரின் இழப்பானது ஓர் **திட்டமிட்ட பொறா மைத்தனமான படுகொலை என்பதும்,** இது அணுவள வும் மறைக்க முடியாத அராஜக நடவடிக்கை என்ப தும் தெட்டத் தெளிவாகின்றது. இதை மனிதாபி மானமுள்ள எந்தவொரு மனித ஜீவனும் மறுப்பதிற் கில்லை.

தோழர் அமீனை LTTE இனர் படுகொலை செய்த பின்னர்; LTTE இனர் கைது செய்யப்பட்டு, LTTE இனர் மன்னிப்புக் கேட்டுப் பிடிக்கப்பட்டோர் விடுதலை செய்யப்பட்ட பின்பும் எமது அமைப்பின் பிரதான தோழர்களை யாழ்நகர சந்தியொன்றில் வைத்து புலிகள் வழிமறித்துத் தாக்க முற்பட்ட போது இச் சூழலில் இருந்த புலிகளின் முகாம்களில் தொடர்ச்சியான தாக்குதல் நடத்த வேண்டிய நிலைமைக்கு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். ஒரு புலி கொல்லப்பட்டது. ஆபத்தான நிலையிலிருந்த மூன்று புலிகளை வைத்தியசாலையில் சேர்த்தோம். அவற்றில் இரண்டு புலிகள் இறந்துவிட்டன. மற்றப் புலிக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை.

இத்தகைய நடவடிக்கைகள் இனியும் தொடர்ந் தால் மிகக் கடுமையான பதில் நடவடிக்கைகளில் **நாமும் ஈடுபட வேண்டியது தவிர்க்க முடியாதது** என எச்சரிக்கை செய்து கொண்டேயிருந்தோம் இச் சந்தர்ப்பத்தில் பொது நபர்கள் சிலரின் தலை யீட்டின் பெயரில் 22. 02. 86 நண்பகல் 12. 00. மணி யளவில் மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தையில் கைது செய்யப்பட்ட தோழர்களும், ஆயுதங்களும், கொல்லப்பட்டவர்களும் இருதரப்பிலும் கைமாறப் பட்டன.

## துப்பாக்கி மொழி புரியக் கூடியவர்களோடு-நாமும் துப்பாக்கிகளாலேயே பேசுவோம் !

ஐக்கியத்தின் அவசியத்தை நாம் முழுமையாக உணர்கின்றோம். ஆனால் ஐக்கியத்தைக் காரணம் காட்டி எமது வீரம் மிக்க தோழர்களை இரத்த வெறியர்கட்குப் பலிகொடுக்க நாம் தயாராக இல்லை.

**ஐக்கியத்தை எம்மிடம் வலியுறுத்தும் பெரியோர் கள் முதலில் அவ்விடயத்தை, ஐக்கியத்தைச் சீர் குலைப்பவர்களிடம்** (மேலாதிக்க உணர்வோடு சக போராளிகளைக் கொன்று தீர்க்க முற்படுபவர் களிடம்) **வலியுறுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள் கின்றோம்.**

போராட்டக் கடமைகள், தேசியத் தேவைகள் மீதான எமது பொறுப்புணர்வை பலவீனமாகக் கருதுபவர்களுக்கு நாம் வேறு வழிகளில் **பாடம் கற்பிக்க வேண்டியவர்களாக நிர்ப்பந்திக்கப்பட்டுள் ளோம்.** தோழர்களின் பலியெடுப்பால் கொதிப் படையும் எமது தோழர்கட்கும், மக்களுக்கும் பதில் சொல்ல வேண்டிய தேவை எமக்குள்ளது.

சர்வதேசப் போர்ப்பாசறையில் பயிற்சி பெற்ற வன்னிப் பிராந்திய PLA தோழன் றேகன் புலிகளால் திட்டமிடப்பட்ட முறையில் வஞ்சகத்தனமாகக் கோரக் கொலை செய்யப்பட்டபோதும்...... நாம் **ஐக்கியத்துக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து** பொறுமை இழக்காமல் செயற்பட்டோம். துப்பாக்கி களை யாரோ ஒரு போராளிக்கெதிராகத் திருப்ப விரும்பவில்லை! மக்கள் மத்தியில் இப்படுகொலை யின் பின்னணியை விளக்கிப் பிரச்சாரம் செய்தோம்

எமது தோழன் றேகனின் இரத்தம் உறையு முன்பே, அத்துயரிலிருந்து நாம் மீளுமுன்பே......



**"தமிழீழம் என்தாகம்"** என்றவரால்
**"ஈழம் எங்கள் தாகம்"** என்ற இன்னொரு
ஈழப்போராளி இவனும் மடிந்தான்,

—தோழர் அமீன்

www.tamilarangam.net

எமது வீரமிக்க தோழனும், சர்வதேசப் போர்ப் பாசறையில் தோழர் ரேகனுடன் பயிற்சி பெற்ற தோழன் அமீனும் (ஜெகநாதனும்) புலிகள் இயக்கத்தினரால் திட்டமிடப்பட்ட ரீதியில் படுகொலை செய்யப்பட்டனர்.

இதன் பின்னர் கூட நாம் தேச நலன் கருதி, பேச்சு வார்த்தையில் இறங்கி எம்மால் கைது செய்யப்பட்ட புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மூவரை மிகவும் கௌரவமான முறையில் ஒப்படைத்தோம்! அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும் திருப்பிக் கொடுத்தோம்! சக தோழனின் இழப்பினாலும், புலிகள் இயக்கத்தினரின் திட்டமிட்ட அப்பட்டமான வஞ்சகத்தனத்தினாலும் ஆத்திரமும், ஆவேசமும் அடைந்த எமது தோழர்களைச் சமாதானப்படுத்தினோம்.—

## அராஜகத்திற்கு முற்றுப்புள்ளி வைப்போம்!

இவ்வளவுக்குப் பிற்பாடும்... புலிகள் இயக்கமானது எமது ''மக்கள் விடுதலைப் படை'' (PLA) முகாம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்த முற்பட்டு அது முறியடிக்கப்பட்டது. எமது தற்காப்புத் தாக்குதலில் தப்பியோடிய இருவரை எமது நேசகர இயக்கமான TELO (தமிழீழ விடுதலை இயக்கம்) ஐச் சேர்ந்தவர்கள் கைது செய்து விசாரித்தபோது தாங்கள் பிரபாகரன் இயக்கத்தைச் சேர்ந்த புலிகள் என்பதை ஒப்புக்கொண்ட விடயத்தையும் இனி ஈழ மக்கள் மத்தியில் மறைக்க முடியாது போய்விட்டது.

இதன் பின்னருங் கூட எமது பிரதான தோழர்களை மேலும் படுகொலை செய்யப் புலிகள் முற்பட்டன. இதற்கு மேல் எமது ஆயுதங்களைக் கீழ் நோக்கியவாறு வைத்திருப்பது அவ்வளவு சாத்தியமானதாகத் தோன்றவில்லை. எமது ஆயுதங்களும் உயர நேர்ந்ததால் அநாவசியமான இழப்புக்கள் ஏற்பட்டன. இதற்கு முழுப் பொறுப்பையும் புலிகளே ஏற்க வேண்டும்.

இயக்கங்களுக்கிடையே அநாவசியமான அநாகரீகமான மோதல்கள் தவிர்க்கப்பட வேண்டும். இதனால் ஏற்படும் இழப்புகள் அநியாயமானவை. ஆனால்...... துப்பாக்கி மொழிமட்டுமே புரியக்கூடியவர்களோடு நாமும் — துப்பாக்கிகளாலேயே பேச வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம் என்பதைக் கூறி வைக்க விரும்புகின்றோம்.

அராஜகம் தானாக அடங்காவிட்டால்,
அதனை அடக்கவேண்டியது-எமது
தேசியக்கடமை!

★



*அராஜகத்தின் அடாவடித்தனங்களில் ஏற்பட்ட ஈடில்லா இழப்புக்களில்... ஓர் ஈழப் போராளி தோழன் பிரதாப் (EPRLF)*

---

## தொழிற்சங்கங்கள், கூட்டாகக் கூக்குரல்!

*வடக்கு கிழக்கில் இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும்!*

*மேலும் இராணுவ முகாம்கள் அமைக்கும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்!*

*தமிழர்கள் மீதான விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்!*

*யுத்தக் கப்பல்களும், குண்டுவீச்சு விமானங்களும் எமக்கு வேண்டாம்!*

என சிறிலங்கா அரசின் சுத்த இராணுவப் போக்கைக் கண்டித்து கொழும்பு சுகததாச உள்ளரங்கில் 21 தொழிற்சங்கங்கள் கூட்டாக மாநாடு நடத்தியது. இதில் வாசுதேவ நாணயக்கார, பாலாத்தம்பு, ஜனார் அனவீமல்லா உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். திடீரென சில அரச கைக்கூலிக் குண்டர்கள் புகுந்து குழப்பம் விளைவித்ததால் மகாநாடு இடை நிறுத்தப்பட்டது. பலர் காயமடைந்தனர்.

★

www.tamilarangam.net

## சுற்றி வளைக்கப்பட்ட சிறிலங்கா சிப்பாய்களுக்கு, ஹெலிக்கொப்டர் மூலம் உணவுப் பொட்டலம்!

*பிப்ரவரி 01:* அப்பாவி மக்களைக் கொன்று குவித்து வெறியாட்டம் நடத்த; 10 கவச வண்டிகளிலும் நவீன ரக ஆயுதங்களுடனும் அனுராதபுரத்திலிருந்து புறப்பட்ட 200க்கும் அதிகமான இராணுவத்தினரை கிளிநொச்சியில் தர்மபுரம் என்ற இடத்தில் வைத்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவான PLA (Peoples' Liberation Army) இடை மறித்து முற்றுகையிட்டுத் தாக்கியது.


இராணுவம் முன்னேற விடாது "ஏரியா வெப்பன்" மோட்டார் பீரங்கி தாக்குதலை மேற்கொண்டு இராணுவத்தினரை நிலை குலையச் செய்தனர். எதிர்பாராத இத்தாக்குதலில் இராணுவம் ஸ்தம்பித்துப் போனது.

இராணுவத்தினருக்கு உதவியாக முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவக் கும்பலை PLA இன் மற்றுமொரு பிரிவினர் வெளியேற முடியாது சுற்றிவளைத்துத் தாக்குதல் தொடுத்தனர். இதில் இராணுவ முகாமிலுள்ள நீர்த்தாங்கி ஒன்று சிதறியது.

ஏனைய இராணுவ முகாம்களை அண்மித்த பாலங்கள் தகர்க்கப்பட்டன. பல வீதித் தடைகள் போடப்பட்டு பாதைகள் திசை திருப்பப்பட்டன. சின்னாபின்னமாக்கப்பட்ட இராணுவத்தினரைக் காப்பாற்ற வந்த ஹெலிக்காப்டர்கள் ஈடுகொடுக்க முடியாது பின்வாங்கின.

இராமநாதபுரம், கல்மடு ஆகிய பகுதிகளில் நான்கு நாட்களாக நடைபெற்ற இச்சமரில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய்களுக்கு, உணவுப் பொட்டலங்கள் போட வந்த ஹெலிகாப்டர்களைத் தாக்கியபோது வீசப்பட்ட உணவுப் பொட்டலங்களைப் போராளிகள் கைப்பற்றினார்கள்.

சிறிய யுத்த விமானங்களும், ஹெலிகாப்டர்களும் மேலிருந்து குண்டு மழை பொழிந்த வண்ணமேயிருந்தன. இதேவேளை இராணுவம் தற்காப்பு நடவடிக்கைக்காக கிளிநொச்சி இராணுவ முகாமிற்கு ஆனையிறவு, பூநகரி இராணுவ முகாம்களிலிருந்து ஆயுதப் படையினர் குவிந்த வண்ணம் இருந்தனர். இறுதியாக இராணுவத்தினர் தமக்குப் பாதுகாப்பாக கல்மடு ஊர் மக்களைப் பிடித்து வைத்திருந்தனர். போராளிகள் தாக்கியபோது அவர்கள் இராணுவப் பிடியிலிருந்து தப்பி ஓடி விட்டனர். பல பொது மக்கள் காயமடைந்தனர். சில வீடுகள் சேதமடைந்தன. ஒரு ஹெலி படுசேதத்துக்குள்ளானது. பலியான இராணுவத்தினரின் மொத்த எண்ணிக்கை ஆதார பூர்வமாகத் தெரியவில்லை. இதில் ஏனைய இயக்கங்களும் உதவியது.



அந்நியன் சுவடுகள்.....
அடுப்பங்கரையிலும் பதிந்தபோது;
அடக்குமுறையின் அநீதி கண்டு,
ஆயுதங்களைக் குறிபார்க்கும் ஈழப்பெண்கள் —

### புலிப்படை உலைவைத்த போராளி சிலையை கூலிப்படை குலைத்தது சாலையில்

*பிப்ரவரி 07 :* அதிகாலை 4 மணியளவில் 6 ரக் வண்டிகளிலும் ஒரு காரிலும் வந்த இராணுவத்தினர் பூவரசம் குளம் என்ற இடத்தில் நின்ற வாகனங்களையும், தனியார் பஸ் ஒன்றையும் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தினர்.

பின்னர், புலிகளால் படுகொலை செய்யப்பட்ட EPRLF இன் "மக்கள் விடுதலைப் படை" போராளி ரேகனின் சிலையை உடைத்தனர்.

இதைக் கேள்வியுற்ற PLA போராளிகள் இராணுவத்தினர் வரும் வழியில்கண்ணி வெடித்தாக்குதலை மேற் கொண்டபோது 3 சிங்கள இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர்: சுமார் 10 பேர் பலத்த காயங்களுக்குட்பட்டனர். பகல் 11 மணியளவில் இச்சம்பவம் நடந்தது. சுமார் 1 மணி நேரம் நடைபெற்ற இத்தாக்குதலில் உதவிக்கு வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று குண்டு வீசியதில், அரசு ஊழியர் ஒருவர் மாண்டார்.


### இராணுவத்தினரிடமிருந்து இயந்திரத் துப்பாக்கிகள் ஈழப் போராளிகட்கு!

*மார்ச் 02:* காலை 10 மணியளவில் வவுனியா மன்னார் வீதியில் பம்பைமடு என்னுமிடத்தில் வந்த இராணுவப் படையினரை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படை" (PLA) ஆனது இடைமறித்து கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டபோது 10 ராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். 12க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிகிறது. இயந்திரத் துப்பாக்கிகள், கிரெனெட்டுக்கள் என்பன PLA இனால் கைப்பற்றப்பட்டன. இராணுவ வண்டி முற்றாக நாசமானது. படுகாயமடைந்தவர்களை ஹெலிக்கொப்டர் மூலம் 5 தடவைகளில் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

## எதிர்பார்த்திருந்தே எதிர்த்தாக்குதல்!

*மார்ச் 03:* நேற்றுக்காலை நடைபெற்ற இராணுவத்தினர் மீதான தாக்குதலையடுத்து அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்று குவித்தும், கடைகளைச் சூறையாடியும், வீடுகளை எரித்தும், பெண்களைக் கற்பழித்தும் தன் இயலாமையைச் சமாளிக்க வந்த ஆயுதப்படையினர் மீது ''மக்கள் விடுதலைப் படை'' மீண்டும் எதிர்த்தாக்குதலைத் தொடுத்தது.

முன் கூட்டியே இராணுவத்தினரின் வருகையை எதிர்பார்த்திருந்த PLA இன் மோட்டார் பீரங்கி (s. s, 85. 100 mm) தாக்குதலில் இராணுவத்தினர் வந்து கொண்டிருந்த ''டிராக்டர்'' வண்டி சுக்கு நூறாகியது. தங்களை இனங்காட்டிக் கொள்ளாதவாறு சாதாரண மக்கள் உடைகளில் விவசாயிகள் போல் வேடத்தில் வந்த இஸ்ரவேலினால் பயிற்சியளிக்கப்பட்ட விசேட அதிரடிப் படையினர்களே இவர்கள். அவர்களிடமிருந்த ஆயுதங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன. தனித்தனியாகச் சிதறிக்கிடந்த தலைகளை எண்ணிப் பார்த்ததில் சுமார் 25க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகத் தெரிந்தது. இதில் போராளி ஒருவர் காயமடைந்தார்.



காக்கிச் சட்டைகளின் கையிலிருந்த துப்பாக்கிகளினால்...... துடிதுடித்த ஓர் ஈழக் குடிமகனின் புதல்வன் இவன்— கவச வண்டிகளைக் காத்துக் கிடக்கின்றான் கையில் ''ராக்கட் லாஞ்சருடன்''

## மொசாட்டின் புதிய இரட்டைக் கொலைத் திட்டம்!

### குறுகிய நேரத்தில் ஒரு கூட்டத்தினரைப் படுகொலை செய்தல்
### இது வயல் வெளிகளில் நடப்பதால் வெளியில் தெரியாது:
### விவசாயத்தைப் பூண்டோடு அழிப்பது
### போராளிகட்கு உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதும்
### அரசிடம் உணவுக்காக மக்களைக் கையேந்த வைப்பதும்:

### கவச வண்டிகளில் வந்து காட்டுமிராண்டித்தனம்!

*டிசம்பர் 10:* கிளிநொச்சி உருத்திரபுரம் ஆறாம் வாய்க்கால் என்ற இடத்தில் 10 கவச வண்டிகளின் பாதுகாப்புடன் வந்த சுமார் 500 இராணுவத்தினர் வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகள் கூட்டத்தினரைச் சுட்டுத் தள்ளினர். அ. மனோகரராசா, இரத்தினம், பெரியகண்ணன், பழனிச்சாமி, வேலாயுதம், தம்பையா, கனகு, காளிமுத்து உட்பட 18 விவசாயிகள் ஸ்தலத்திலேயே சுருண்டு விழுந்தார்கள். சிலர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சிதறி ஓடினார்கள். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு வந்து கணேசபுரம், ஜெயந்திநகர் ஆகிய இடங்களிலும் கண்டபடி சுடத் தொடங்கினார்கள். இதில் வீடுகளைப் பூட்டி உள்ளிருந்த பலர் வீட்டினுள்ளேயே சுடுபட்டு மாண்டு கிடந்தார்கள். சிலர் கிளிநொச்சி மருத்துவ மனையில் உயிர் ஊசலாடும் நிலையில் உள்ளனர்.

### விவசாயிகளைக் கொன்று நெல் மூட்டைகள் கொள்ளை!

*பிப்ரவரி 9:* கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து சென்ற இராணுவத்தினர் பரந்தன் என்னுமிடத்தில் அறுவடை செய்து கொண்டிருந்த விவசாயிகள் கூட்டத்தினரை நோக்கி தாறுமாறாகச் சுடத் தொடங்கினார்கள். இதில் A. மகேந்திரன் என்பவர் உட்பட 6 விவசாயிகள் மாண்டார்கள். பலர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் உயிர் தப்பி ஓடினார்கள். அதில் ஒரு விவசாயியைக் கைது செய்து வண்டியில் 300 நெல் மூட்டைகளை ஏற்றும்படி பணித்துப் பின் அவரை அந்த இடத்திலேயே சுட்டுக் கொன்றுவிட்டு மீதி நெல் மூட்டைகளைத் திவைத்துக் கொளுத்திவிட்டு சென்றனர்.

### வயல் வெளியில் வரிசையாக நிற்க வைத்து இராணுவம்-கைவரிசை!

*பெப்ரவரி 21:* அக்கரைப்பற்றுப் பகுதியில் உடும்பன் குளம் என்னுமிடத்தில் வயல் வேலைகளில் விவசாயிகள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அங்கு ''ரக்'' வண்டிகளில் வந்திறங்கிய இராணுவத்தினர் அப்பகுதியைத் திடீரெனச் சுற்றி வளைத்தனர். கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு அனைவரையும் ஒன்று கூடுமாறு இராணுவத்தினர் வெறித்தமாகக் கத்தினார்கள்.

பின்னர் ஆண்களும், பெண்களும் தனித்தனியே பிரிந்து நிற்குமாறு கூறினர். அதில் 6 இளம்பெண்களை ஜீப்பில் ஏற்றிவிட்டு மிகுதிப் பெண்களை

www.tamilarangam.net



ஓடுமாறு கூறினர். அதன்பின் ஆண்கள் அனைவரையும் வரிசையாக நிற்கும்படி கூறி, முன்னால் நின்றவரின் நெஞ்சில் துப்பாக்கியை அழுத்தி ஒரே வரிசையில் அனைவரையும் சுட்டுக் கொன்றனர். காயங்களுடன் தப்பியோடிய மூவரைச் சுற்றி வளைத்து நின்ற இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். உயிரோடு வீழ்ந்து கிடந்த 7 பேரையும் அவர்கள் சூடு மிதித்த வைக்கோலில் போட்டுக் கொளுத்தினர். பின்னர் அனைவரின் சடலங்களையும் நெருப்பில் இழுத்துப் போட்டனர். சிறிது தூரத்தில் வயலில் கற்பழிக்கப்பட்ட நிலையில் காயங்களுடன் 4 பெண்களின் சடலம் அனாதரவாய்க் கிடந்தன. இதுவரையில் நடந்த இராணுவ வெறியாட்டங்களிலேயே மிகவும் கேவலமான முறையிலும், கொடூரமான முறையிலும் நிகழ்ந்து உலகத்தையே உலுப்பிய இச்சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி 107 என ஆதாரபூர்வ செய்திகள் கூறுகின்றன. கடந்த வருடம் புதிதாகப் போடப்பட்ட கோமாரி என்ற இடத்திலுள்ள இராணுவ முகாமிலிருந்து வந்தவர்களே இந்த மிருகத்தனமான வெறியாட்டங்களில் ஈடுபட்டதாக இராணுவத்தினர் வரும்போது நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றார்கள்.

## விவசாயிகள் வேட்டை தொடர்கிறது!

*பெப்ரவரி 24:* ரக் வண்டிகளிலும், கவச வாகனங்களிலும் திடீரென வந்திறங்கிய இராணுவத்தினர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த முரசுமோட்டை என்ற இடத்தைச் சுற்றி வளைத்து அங்கு வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகளை ஓரிடத்தில் கூடுமாறு ஒலிபெருக்கி மூலம் அழைப்பு விடுத்தனர்.

பின்னர் அங்கிருந்த உழவு இயந்திரங்களில் அனைவரும் ஏறுமாறு இராணுவத்தினர் கூறினர். முடியாது என மறுத்த மூவரை அந்த இடத்திலேயே சுட்டுக் கொன்றார்கள். மீதி விவசாயிகள் சுமார் 27 பேர்களை 3 உழவு இயந்திரங்களில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களைப்பற்றிய தகவல் இதுவரை தெரியவில்லை.

---

## கொழும்பில் குண்டு வெடிப்பு! அத்துலத் முதலி ஆவேசம்!

*ஜனவரி 17 :* சிறிலங்கா தலைநகர் கொழும்பில் பிளாசா நவீன சந்தைக் கருகில் பாரிய குண்டு ஒன்று வெடித்ததினால் ஒரு சிங்கள பொலிஸ் தலத்திலேயே கொல்லப்பட்டார். பலசிங்கள பொலிசார் படுகாயத்துக்குள்ளானார்கள் உடனடியாக இராணுவம் அப்பகுதியைச் சுற்றி வளைத்து, அங்குலமங்குலமாக தேடுதல் வேட்டை நடத்தியது! கொழும்பு சுற்றுவட்டாரங்களில் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டன.

''தனிச்சிங்களப் பகுதித் தலை நகரிலும் குண்டு வெடிப்பா? இப்படித்தான் நாளை என் வீட்டிலும் குண்டு வெடிக்கும்'' என பாதுகாப்பு மந்திரி லலித் ஆவேசமாகக் கத்தி முப்படைத் தளபதிகளையும் உடனடியாக உஷார் படுத்தியுள்ளார்.

## நாட்டுப் பாதுகாவலர் வேட்டை! கூட்டை உடைத்து கோழிக் களவு!

*ஜனவரி 18:* பலாலி இராணுவ முகாமிலிருந்து சுமார் 12 கவச வண்டிகளுக்குப் பாதுகாப்பாக ஹெலிக்கொப்டர்கள் பறந்து வந்த போது ஏற்கெனவே வளவொன்றில் ஒளிந்திருந்த 300க்கும் அதிகமான இராணுவத்தினர் கவச வண்டிகளுக்குப் பின்னால் கால் நடையாகச் சென்றனர்.

வீதியால் செல்லாமல் ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கி அவர்கள் வேலிகளையும் மதில்களையும் உடைத்துக்கொண்டு பயிர்களையும் வெட்டிச் சாய்த்துக்கொண்டு வீடுவிடாகப் புகுந்து சுட்டுத் தள்ளிக் கொண்டே சென்றார்கள். சூறையாடி எஞ்சிய பொருட்களுடன் வீடுகளை எரித்துக் கொண்டே சென்றார்கள் எதிர்ப்பட்ட ஆடுமாடுகளையும் சுட்டுக் கொன்றார்கள். கோழிகளைப் பிடித்து வண்டிகளில் போட்டார்கள், வேட்டொலிகள் கேட்டவுடனேயே மக்கள் உடைமைகளைப்போட்டுவிட்டு ஓட்டம்பிடித்தனர். செய்தியறிந்த போராளிகள் அங்கு விரைந்து நேருக்கு நேர் மோதிய போது இராணுவம் பின்வாங்கி மீண்டும் முகாமிற்குள் புகுந்து விட்டது. ''அம்புலன்ஸ் கெலிகொப்டர்கள்'' அவ்விடத்திற்கு வந்து போனதிலிருந்து பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் காயமுற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## ''மெசின் கன்கள்''-இறக்குமதிக்கு ஈடாக பாக்கிஸ்தானுக்கு.... ''ஈழ மக்கள் கண்கள்''-ஏற்றுமதி

*ஜனவரி 19 :* பீரங்கி பூட்டப்பட்ட கவச வண்டிகளில் திருமலை-சேருவிலைத் தொகுதியிலுள்ள தோப்பூர் முள்ளம் பேணி வத்த 56-ம் 57-ம் காலனிகளில் வந்திறங்கிய இராணுவத்தினர் 17 இளைஞர்களையும் 3 இளம் பெண்களையும் கைது செய்து கொண்டு சென்றனர். முகாமில் வைத்து அதில் 10 பேர்கள் கொல்லப்பட்டு உடனடியாக ஆபரேஷன் மூலம் கண்கள் தோண்டியெடுக்கப்பட்டன.

கடந்த மாதம் பாக்கிஸ்தான் ஜனாதிபதி ஜியாவின் சிறிலங்கா விஜயத்தின்போது J.R. உடன் செய்து கொண்ட கண்தான ஒப்பந்தத்தின் பெயரிலேயே இது நடந்ததாகப் பின்னர் ஆதார பூர்வமாகத் தெரியவந்துள்ளது! இது தொடர்ந்தும் நிகழலாம் என மக்கள் அச்சப்படுகின்றனர்!

www.tamilarangam.net



## மட்டுமாநகரில் மனித வேட்டை தொடர்கிறது!

***ஜனவரி 20 :*** மட்டக்களப்பு-வெஸ்ட்புரம், இருதயபுரம் ஆகிய இடங்களில் இராணுவத்தினரால் சுமார் 210 இளைஞர்களும், இளம்பெண்களும், நடுத்தர வயதுள்ளவர்களும் கைதுசெய்யப்பட்டனர். 34 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதன்போது போராளிகட்கும் இராணுவத்தினருக்கு மிடையே பலத்த மோதல் ஏற்பட்டது. சுமார் 10 மணித்தியாலங்கள் நீடித்த இச்சமரில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், 20க்கும் அதிகமானோர் படுகாயமுற்றனர். காயம்பட்ட இராணுவத்தினர் உடனடியாக ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அதன்பின் குவிக்கப்பட்ட இராணுவப்பட்டாளங்கள் தனது வழமையான கையாலாகாத் தனங்களில் ஈடுபடத்தொடங்கின. இதன் போது சுமார் 68 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. 18 பெரிய வீடுகள் இராணுவத்தினரால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன. கடைகள் கொள்ளையடிக்கப்பட்டு கொளுத்தப்பட்டன. சுற்றுடலிலுள்ள மக்கள் காடுகளுள் ஓடியொளிந்துள்ளனர்.

## போராளிகளின் போக்குவரத்தைத் தடை செய்ய "மொசாட்"இன் மூளை!

***ஜனவரி 21 :*** கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து 2 மினிபஸ்களிலும் 12 ரக் வண்டிகளிலும், 26 கவச வண்டிகளிலும் நெடுங்கேணியில் வந்திறங்கிய இராணுவத்தினர் அங்கிருந்த சைக்கிள்கள் எல்லாவற்றையும் ஒரிடத்தில் குவிக்கும் படி கட்டளையிட்டனர். பின் அவையனைத்தையும் குண்டு வைத்து தகர்த்தனர். மக்கள் சிதறி ஓடினர். பின்னர் பெற்றோல் ஊற்றிக் கொளுத்திவிட்டு, கடைகளின் பூட்டுக்களை துப்பாக்கியால் சுட்டு உடைத்துக் கொண்டு ஒரு குழுவினர் செல்ல, மறு குழுவினர் அடித்து நொறுக்கி எரித்துக்கொண்டு சென்றனர். மற்ற இராணுவத்தினர் அப்பிரதேசத்தைச் சுற்றி வளைத்துப் போராளிகள் வருகின்றார்களா எனக் காவல் நின்றனர். இச் சம்பவங்களில் மகேந்திரன் என்பவர் கவலைக்கிடம். பொதுமக்கள் ஏற்கெனவே அப்பகுதியை விட்டு உயிர்தப்பி ஓடிவிட்டனர். இதனால் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை. போராளிகள் கூடுதலாக சைக்கிள்களில் வந்தே தங்கள் மீது தாக்குதல் நடத்துவதினாலேயே சைக்கிள்களை நாசப் படுத்தியதாக சிலர் கருத்து தெரிவித்தனர். இதன் மூலம் போராளிகளின் போக்குவரத்தைச் சீர் குலைக்க "மொசாட்" திட்டம் தீட்டிக் கொடுத்துள்ளது.

## மலையக மக்களின் பாதுகாப்பு மலையேறிவிட்டது!

***ஜனவரி 28 :*** மலையகம்— தலவாக் கொல்லையில் இந்துக் கோவில் கலை நிகழ்ச்சியில் சிங்கள காடையர் கூட்டம் புகுந்து அல்லோல கல்லோலப் படுத்தியது. தமிழர்கள் இரும்புக் கம்பியால் தலையில் தாக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து நுவரெலியா, கம்பளை, தலவாக்கொல்லைப் பகுதியில் கலவரம் மூண்டது. இதைப் பார்வையிடச் சென்ற "இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்" பிரதிநிதி ஒருவர் அவ்விடத்திலேயே தாக்கப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். சிங்களக் குண்டர்களின் இந் நடவடிக்கைகளை ஆட்சேபித்து மலையக தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை. இ. தொ. கா. செயலாளர் M. S. செல்லச்சாமி ஜெயவர்த்தனாவுக்கு அவசரத் தந்தி கொடுத்தார்.

## - 'எரிமலை' இதழ் வெளியீட்டு விழா -

### மலையக மக்களும் ஈழ மக்களே!
### கடமையைச் செய்தோம்!
### உரிமையைக் கேட்கிறோம்!
### விலங்கை உடைப்போம்!
### விடுதலை பெறுவோம்!

காட்டை நாடாக்கிக் காலங்காலமாக உழைத்து உழைத்து உருக்குலைந்து போன மலையகத் தமிழ் மக்கள் இன்று உணர்வுபூர்வமாகச் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். ***அரிவாள் ஏந்திய கைகள் ஆயுதம் ஏந்திடத் துடித்துக் கொண்டிருக்கின்றன.*** மலையக மாணவர் இளைஞர் முன்னணி'' (USYF) சிறிலங்கா அரசின் மனிதாபிமானமற்ற தேசிய இன அடக்குமுறையையும், இராணுவத்தினரின் அடாவடித்தனங்களையும், மலையகத் தமிழ் மக்கள் நாடு கடத்தப் படுவதையும் வன்மையாக எதிர்த்து சென்னையில் ஓர் ஆர்பாட்டப் பேரணியை நடத்தியதின் தொடர்ச்சியாக, "எரிமலை,' என்ற மாத சஞ்சிகையையும் வெளியிட்டுள்ளது.

23. 02. 86 (ஞாயிறு) காலை 10. 00 மணியளவில் தேவநேயம்பாவாணர் நூலகத்தில் (L. L. A) இல் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு USYF செயலாளர் தோழர் எம். எல். தாசன் அவர்கள் தலைமை தாங்கினார். முதல் இதழை தோழர் ந. அரணமுறுவல் (தமிழக-ஈழ நட்புறவுக் கழகச் செயலாளர்) வெளியிட, தோழர் சொக்கலிங்கம் (மக்கள் உரிமைக் கழகம்) பெற்றுக் கொண்டார். தோழர். என். டி. வானமாமலை (வழக்கறிஞர்) முனைவர். இரா. இளவரசு (தமிழக ஈழ நட்புறவுக் கழகத் தலைவர்) திரு ஆர். எஸ். சுப்ரமணியம் (வழக்கறிஞர்), தோழர் ச. செந்தில்நாதன் (வழக்கறிஞர்) தோழர். வரதராஜப் பெருமாள் (ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி). ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள். தோழர் அன்ரன் (USYF) அவர்களின் வரவேற்புரையோடு ஆரம்பித்த இந்நூல் வெளியீட்டு விழாவை தோழர் ஜெகன் (USYF) அவர்கள் நன்றியுரை நிகழ்த்தி முடித்து வைத்தார்.

***—இறுதி வெற்றி ஈழப் பாட்டாளி மக்களுக்கே!—***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தேசியக் கொடி ஏற்றும்படி எச்சரிப்பு! குடிமக்கள் வீடுகள் எரிப்பு!

**—தேசிய பந்தோபஸ்துப் படையினரின் பாசிச வெறியாட்டம்.**

*பிப்ரவரி 4 :-* பிப்ரவரி 4 ம் திகதி எல்லோரும் கண்டிபாகத் தேசியக் கொடியேற்ற வேண்டும் என்று திருகோணமலை ஆலங்கேணி பகுதியில் வாழும் தமிழ் மக்களுக்கு ஆயுதப் படையினர் எச்சரித்து விட்டுச் சென்றனர். இல்லாவிட்டால் இப்பகுதியில் எல்லோரையும் சுட்டுக் கொன்று விடுவோம் எனவும் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு எச்சரித்து விட்டுச் சென்றிருந்தனர்.

குறிப்பிட்ட திகதியன்று எச்சரிக்கப்பட்ட தமிழ் மக்கள் வீடுகளை விட்டுவிட்டு காட்டுக்குள் ஓடி ஒளிந்து விட்டனர். ஒரேயொரு வீட்டில் மட்டும் பயத்தினால் கொடி கட்டப்பட்டிருந்து. அங்கு வந்த ஆயுதப்படையினர் வீட்டுக்காரரை சத்தமிட்டு அழைத்து ''மற்றவர்கள் ஏன் கொடி ஏற்றவில்லை'' எனக் கொச்சைத் தமிழில் கேட்டுவிட்டு அந்த இடத்திலேயே மனைவி மக்கள் முன்னிலையில் சுட்டுக் கொன்றனர். பின்னர் அப்பகுதியிலுள்ள வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டுச் சென்றனர்.

## ''கட்டாய இராணுவ சேவை''யை அமுல் படுத்த, கட்டவிழ்க்கப்பட்ட காடைத் தனத்திற்கு முழு அதிகாரம்! பூட்டப்பட்ட வீடுகளில் பெண்கள் கற்பழிப்பு!

*பிப்ரவரி 7 :* திருகோணமலை பட்டித்திடல் என்னுமிடத்தை சிறிலங்கா இராணுவம் சுற்றி வளைத்து ''சோதனை செய்யப் போகின்றோம்'' என்று கூறி வீடுவீடாகச் சென்று பொது மக்களின் பொருட்களை விசி எறிந்தும், பூட்டியிருந்த வீட்டுக் கதவுகளை உடைத்தும் சல்லடை போட்டது. ஒரே வீட்டினுள் 5 பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளதோடு அதில் 3 பெண்களின் கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். மற்றொரு பெண்ணின் சடலம் கற்பழிக்கப்பட்ட நிலையில் தோட்டத்துள் காணப்பட்டது. பல இளம் பெண்கள் மானபங்கப் படுத்தப் பட்டுள்ளார்கள். வேறொரு வீட்டினுள் 16, 17 வயதுடைய இரு பாடசாலை மாணவிகள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். இதில் ஒரு பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மறுதினம் திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணும் சிங்கள இராணுவத்தின் மிருக வெறிக்கு இரையாக்கப்பட்டுள்ளாள்.

*பிப்ரவரி 08 :* திருகோணமலை இறகண்டி என்னுமிடத்தில் புகுந்த இராணுவத்தினரின் அட்டகாசத்தில் 50 வயது, 45 வயது உடைய இரு பெண்கள் உட்பட 4 பேர் கற்பழிக்கப்பட்டதுடன் கொடூரமான முறையில் தாக்கிவிட்டும் சென்றுள்ளனர்.

இதே தினத்தில் மூதூரில் வீடுவீடாகச் சென்று சோதனை செய்த ஆயுதப்படையினர் 14 பெண்களைக் கடத்திச் சென்றுள்ளனர். இவர்கள் என்ன ஆனார்கள் என்ற விபரம் இதுவரை கிடைக்கவில்லை.

## மீண்டும் - மீளாத்துயரில் மீனவர் குடும்பங்கள்!

*பிப்ரவரி 12 :* யாழ்- குருநகரிலிருந்து புறப்பட்ட 7 மீனவர்கள் பாலைத் தீவிற்கு மேற்குப் பக்கம் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை தூரத்தே நங்கூரமிட்டிருந்த சிறிலங்கா கப்பல் படையானது வேகமாக வந்து அம்மீனவர்களின் படகைச் சுற்றி வளைத்தது.

பின்னர் அவர்கள் பிடித்த மீன், இறால் என்பனவற்றை அபகரித்துவிட்டு சென்று விட்டனர். கொஞ்ச நேரத்தில் அப்படகில் குண்டு ஒன்று விழுந்து படகு வெடித்துச் சிதறியது. 6 பேரின் சடலப் கடலில் மிதந்தன. ஒருவர் காயங்களுடன் நீந்திக் கரை சேர்ந்தார். இதனால் அப்பகுதி மீனவர்கள் பட்டினியுடன் மீண்டும் பெரும் பீதியடைந்துள்ளனர்.

## மிருக படையினரின் வேட்டை! சுடுகாடாக்கின்றது நாட்டை!

*பிப்ரவரி 13 ,* மூதூரில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளம் பெண்களில் 4 பேர் மிகவும் கவலைக்கிடமான நிலையிலும், 2 பெண்களின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையிலும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு முன்தினம் 8 பெண்கள் சேர்க்கப்பட்டு சுகயீனமுற்ற நிலையிலேயே மறுபடியும் ''பூசா'' முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். முகாமிலிருந்து சிறிது தூரத்திற்கப்பால் கைகால் கட்டப்பட்ட நிலையில் கிடந்த 14, 16 வயது மதிக்கத்தக்க இரு மாணவிகளின் சடலங்கள் பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டு புதைக்கப்பட்டன.

## அகதிகள் முகாம்களுக்குள்ளும், ஆயுதப்படையினரின் அட்டூழியம்!

*பிப்ரவரி 16 .* காலை 11. 30 மணியளவில் திருகோணமலை இறகண்டி என்னுமிடத்தில் அகதிகள் முகாமிற்குள் திடீரென இராணுவம் நுழைந்தது. 6 இளம் பெண்கள் உட்பட 21 பேர் கைது. துப்பாக்கியால் அடித்து உதைத்து ரக் வண்டிகளில் ஏற்றினர். முடியாது என மறுத்த ஓர் பெண் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் அகதிகள் முகாம்களிலிருந்து தங்கள் பெண்களைக் கூட்டிக்கொண்டு பெற்றோர்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர். இளம்பெண்கள், குழந்தைகள் உட்பட வெளியேறிச் சென்ற ஆறு குடும்பங்களை இராணுவத்தினர் வழிமறித்து துப்பாக்கிப் பிடியினால் அடித்து உதைத்து அவர்களின் பொருட்களை ரோட்டில் வீசியெறிந்து மீண்டும் அகதிகள் முகாமுக்கு விரட்டியடித்துள்ளனர்.

www.tamilarangam.net



## முற்றுகை நடவடிக்கைகளை முறியடிக்கும் ஒத்திகை....

*பிப்ரவரி 17:* இரவு 8 மணியளவில் பந்து போன்ற தலைப் பகுதியுடன் 10 அடி நீள வால் பகுதியையும் கொண்ட ராக்கட் ஒன்று தீச்சுவாலையைக் கக்கிய படி தாழப்பறந்தவாறு பலாலி இராணுவ முகாம் பக்கத்திலிருந்து புறப்பட்டு கொல்லங்ரைத் தீவினூடாக வீடுகளை ஊடறுத்துச் சென்று கடலில் விழ்ந்தது இதனால் பீதியடைந்த மக்கள் பாது காப்பிடங்களுக்கு ஓடி யொளிந்தனர்.

இது முகாமிற்குள்ளேயே இருந்து கொண்டு சுற்றாடலிலுள்ள வீடுகளையோ அல்லது மிகத் தொலைவிலிருந்து கொண்டே கிராமங்களையோ எரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நவீனரக தீச்சுவாலை ராக்கெட் எனச் சிலர் அச்சம் தெரிவிக்கின்றனர். அமெரிக்கா உதவியுடன் இது போன்ற இறக்குமதி செய்யப்பட்ட நவீனரக ராக்கெட் குண்டுகளை இப்போது இராணுவம் முகாமிற்குள்ளேயே இருந்து கொண்டு பரீட்சித்துப் பார்க்கத் தொடங்கியுள்ளது. இது போராளிகளால் இராணுவ முகாம் முற்றுகையிடப்பட்டு இராணுவம் வெளியேறாது தடுக்கப்படும் பட்சத்தில், உள்ளிருந்தே தனது கொலைக்கரங்களை நீட்டும் நடவடிக்கைகட்குப் பரீட்சாத்தமே எனத் தெரிகிறது.

## JR இன் ஊதுகுழல் - தொண்டமான் பெட்டிப் பாம்பாக.....!

*பிப்ரவரி 18 :* தலவாக்கொல்லைப் பகுதியில் பொலிஸ் இராணுவத்தினரால் பல இளைஞர்கள் ஆங்காங்கே கைது செய்யப்பட்டனர். இதை ஆட்சேபித்து தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து தோட்டங்களை விட்டு வெளியேறி ஆர்ப்பாட்டம் செய்தனர். இதைத் தொடர்ந்து அங்கு பெரும் பதட்டநிலை உருவாகியது. இது சம்பந்தமாகத் தொண்டமான் உடனடியாக ஜெயவர்த்தனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் JR இன் வழமையான விருந்துபசாரத்துடன், தொண்டமான் ''ஆமாம்'' தலையசைப்பு!

## அரச கைக்கூலிகளின் அராஜகம்!

இயக்கங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு தனி நபர்களின் வீடுகளைக் கொள்ளையடிப்பதும், வாகனங்களைக் கடத்துவதிலும் சில அரச கைக்கூலிகள் ஈடுபட்டு வருகின்றன. இவர்களைப்பற்றி மக்கள் மிகுந்த கவனமாக இருக்க வேண்டுமெனவும் இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

## முப்படைத் தாக்குதல் திட்டம்! நவீன போர்க்கப்பல்கள் பவனி!

''நீலம்கனி'', ''சூர்யா'', ''பௌவதா'', ''றொணடாபி''

''தச்சயா'', ''நிரையா'', ''ஜகலா''...... ''ஜெயகஜான்'',

''சாசன்வர்த்தயா'', ரம்பயசூர்ய'', வெண்ணப் புவமாற 512'',

''அபிதா 714'',, எபிந்தர 715'' விக்கிரமா 716'

இவையெல்லாம் சிறிலங்கா சிங்கள அரசின் தின்பண்டங்கள் அல்ல! மனித உயிர்களைக் குடிக்கும் போர்க்கப்பல்கள்!!! மனித எதிரி அமெரிக்காவினால் இஸ்ரேல், சிங்கப்பூர், சீனா, தென்னாபிரிக்கா, பாக்கிஸ்தான் போன்ற நாடு களினூடாக இறக்குமதி செய்யப்பட்ட நவீன பீரங்கிகளும், ராக்கட் லாஞ்சர்களும் பொருத்தப்பட்ட அதிவேக இயந்திரப் படகுகள். 5 மைல் தொடக்கம் 7மைல் வரை குறி பார்த்து சுடக்கூடிய பீரங்கிப் படகுகளாகும். இவற்றில் ''லான் கரியர்கள்'' பொருத்தப் பட்டுள்ளதால் வேண்டிய இடத்தில் கரையொதுங்கித் தரையில் இறங்கித் தரைப் படையினருடன் சேர வசதியுள்ள போர்க் கப்பல்களாகும்:

திருகோணமலைக் கடற் பகுதியில் தினமும் பவனி வரும் இப்போர்க் கப்பல்கள் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் வர எடுக்கும் நேரம் 4 மணித்தியாலங்களாகும். இது முப்படையினரும் சேர்ந்து ஓரிடத்தில் முற்றுகையிட்டுத் தாக்குவதற்கான பேச்சுவார்த்தை நாடகக் கதாநாயகன் ஜெயவர்த்தனாவின் திட்டமே! மேலும் இது போன்ற நவீனரக போர்க்கப்பல்களை வாங்கவும், தேசிய இன ஒடுக்கு முறையை மிகவும் லாவகமாகச் செய்யவும் சிறிலங்கா அரசு சதித் திட்டம் போட்டுள்ளது.

## கட்டுநாயக்காவில் கண்காணிப்பு:

வெளிநாடுகளிலிருந்து பயிற்சி பெற்றுத் திரும்பும் தமிழ்ப் போராளிகளைக் கண்டுபிடிக்கவும், தமிழர்கள் சம்பந்தமான போக்குவரத்துக்களைக் கண்காணிக்கவும் : கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தனி அலுவலகம் ஒன்று அமைக்கப் பட்டு 24மணி நேரமும் கண்காணிப்பு முடுக்கி விடப்பட்டு போவோர் வருவோர் பற்றி 'V D O கெமெரா' மூலம் படம் எடுக்கப்பட்டு வருகிறது. கட்டுநாயக்காவில் ராணுவ விசேட பிரிவு உஷார்,

www.tamilarangam.net

# தமிழர்களை முற்றாக அழித்தொழிக்கவும்-'போராளி'களைச் சமாளிக்கவும் புதுத்திட்டம்!

## ஈழம் முழுவதும் இராணுவ முகாம்களை அமைப்பது!
## முப்படைகளையும் முடுக்கி விடுவது!
## ஒட்டு மொத்தமாக தமிழர்மீது தாக்குதல் நடத்துவது!

நவீனரக ஆயுதங்களைக் குவித்தும்; யுத்த விமானங்களைக் கொண்டு குண்டு வீசியும்; கவச வாகனங்களைக் கொண்டு பீரங்கித் தாக்குதல் நடத்தியும்; தற்போதுள்ள இராணுவ முகாம்களையும், முப்படையினரையும் கொண்டு சமாளிக்க முடியாத சிறிலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சரவை புதிய திட்டங்களையும் நடவடிக்கைகளையும் அமுல் படுத்தத் தொடங்கியுள்ளது. ஈழம் முழுவதும் ஆங்காங்கே இராணுவ முகாம்களையும், யுத்த விமான இறங்குதளங்களையும் அமைப்பதுடன் இராணுவ விமானப் படையினரின் எண்ணிக்கையையும், "கட்டாய இராணுவ சேவை" மூலம் அதிகரிக்கவும் நீண்ட கால ஆலோசனையின் பின் புதிய திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

**ஜனவரி 3:** நுவரெலியா—நதுல்ல என்ற இடத்திலுள்ள தோட்டங்களை அரசு சுவீகரித்து புதிய இராணுவ முகாம் அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் மிகத் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. முளையிலே கிள்ளுவதற்கான நடவடிக்கைகட்கு முப்படைகளுக்கும் உடனடி உத்தரவு.

**ஜனவரி 6:** நிலாவெளி—இரக்காடி என்னுமிடத்தில் இராணுவ முகாம் அமைக்கும் வேலைகள் அவசரமாக முடிக்கப்பட வேண்டுமென பாதுகாப்பு அமைச்சர் லலித் உத்தரவிட்டுள்ளார்.

**ஜனவரி 8:** திருகோணமலை இறப்புக்கண்டி என்னுமிடத்தில் இராணுவ முகாமொன்று அமைப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதன் எதிரொலியாக 80 சிங்கள இளைஞர்களை இராணுவ உடையில் தமிழர் வீடுகளுக்கு அனுப்பி அவர்களை அடித்து உதைத்து அப்பகுதியை விட்டு வெளியேறுமாறு எச்சரித்தனர். அவர்கள் குடிபெயரும் இடங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றி வருகின்றார்கள். இது வரை அப்பகுதியில் மொத்தமாக 500 சிங்களக் குடும்பங்கள் இராணுவத்தால் வெருட்டியடிக்கப்பட்ட தமிழர் வீடுவளவுகளில் குடியேற்றப்பட்டுள்ளனர். இதில் சில சிங்களக் குடும்பங்கள் பலவந்தமாக குடியேற்றப்பட்டுள்ளன. தொடர்ந்து அப்பகுதியிலிருந்து தமிழ் மக்கள் எங்கு செல்வதென்றே தெரியாமல் வீடு, உடைமைகளை விட்டு விட்டு குழந்தைகுட்டிகளுடன் வெளியேற்றம். முகாம் அமைக்கப்படும் 10 மீற்றர் சுற்றளவுள்ள பகுதி கடும்ரோந்து நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டுள்ளது. 5 பீரங்கிப் படகுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

**ஜனவரி 31:** மட்டக்களப்பு கதிரவெளி என்னுமிடத்தில் (மட்டுநகர்—மூதூர் வீதியில்) அரசுக்குச் சொந்தமான தோட்டம் ஒன்றில் இரு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் வீட்டை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர் □ பியம்பதுர்த்துவ, புத்தளம் ஆகிய இடங்களில் விசேட பயிற்சி பெற்ற பொலிஸ் பிரிவினர்க்கென பொலிஸ்— இராணுவ கூட்டு முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன.

**பெப்ரவரி 07:** மூதூர், கட்டை பறிச்சான், சேனையூர் பகுதியில் புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுற்றாடலிலுள்ள மக்கள் பீதியுடன் வெளியேற்றம்.

**பிப்ரவரி 18:** மட்டக்களப்பு — ஆயித்திய மலைப் பகுதியில் இராணுவ முகாம் ஒன்று அமைக்கும் முகமாக அப்பகுதியில இராணுவத்தினர் புகுந்து கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்து அப்பகுதியை விட்டு தமிழர்கள் உடனடியாக வெளியேறுமாறு எச்சரிக்கை செய்தனர். துப்பாக்கிப் பிரயோகத்தின்போது ஒரு வயோதிபர் சுட்டுக் கொல்லப்பட்டார். இப்படிப் பல சம்பவங்களைத் தொடர்ந்து மக்கள் எங்கு போவதென்று தெரியாது தவிப்பு.

**பிப்ரவரி 28:** மன்னார் மாதகல் கடலோரப் பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான நாலரை ஏக்கர் காணியொன்றை இராணுவ முகாம் அமைப்பதற்காக இலங்கை அரசு பலவந்தமாக சுவீகரித்துள்ளது.

---

## மரங்கள் தறிப்பு! மதில்கள் தகர்ப்பு!

வடக்கு மாகாணமான யாழ் நகரில் உள்ள மரங்கள் எல்லாம் உடன் தறிக்கப்பட வேண்டும். என சிறிலங்கா அரசு சீறிப்பாய்ந்ததின் தொடர்ச்சியாக............

இப்போது கிழக்கு மாகாணமான மட்டுநகரில் இரண்டடிக்கு மேலுள்ள மதில்கள் எல்லாம் தகர்க்கப் படவேண்டும்! அல்லது தகர்க்கப்படும் என்று சிறிலங்கா அரசு எச்சரிக்கை செய்துள்ளது.

www.tamilarangam.net

# இலங்கையில் 'சிறிலங்கா அரசை' இந்தியா வன்மையாகக் கண்டிக்கிறது!

## அப்பாவி மக்கள் மீதான முப்படைத் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும்!

## பேச்சுவார்த்தை என்று பூச்சாண்டி காட்டக்கூடாது!

## ஒருமாதகால அவகாசத்துள் இரண்டிலொன்று தெரிந்தாக வேண்டும்!

இன்று மட்டுமல்ல! அன்றைய காலம் தொட்டு ''பேச்சுவார்த்தை'' ''அரசியல் தீர்வு'' என்னும் பதங்களை மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிறிலங்கா ஆட்சியாளர்கள் அவ்வப்போது கொதித்தெழும் மக்களை சமாதானம் செய்யவும், உலக அரங்கின் கவனத்தைச் திசைதிருப்பவும் வெறும் **'கண்கட்டு வித்தைகளாகக் காட்டினரே தவிர வெறொன்று மில்லை என்பது இப்போது மிகத் தெட்டத் தெளி** வாகின்றது. அது மட்டுமல்ல **''அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவுவதில்லை''** என்பதற் கொப்ப... **ஏன் ஈழ மக்கள் ஆயுதம் ஏந்த வேண்டும்? ஏன் ஆயுதம் ஏந்தினார்கள்? என்னும் விபரம் பற்றி யும் இனியும் யாருக்கும் எடுத்துரைக்க வேண்டிய அவசியமில்லை என்றாகிவிட்டது.**

''பேச்சுவார்த்தை'' என்று அடிக்கடி சிறிலங்கா அரசைக் கிண்டிக்கொண்டிருந்த இந்திய அரசு அண்மைக்காலத்தில் வன்மையாகக் கண்டிக்கும் போக்கை கையாண்டது நிச்சயம் இந்திய அரசின் ஓர் பாரபட்சமற்ற தருப்புமுனை தான்!

- இலங்கையில் வாழும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது முபபடையினர் நடத்தும் கண் மூடித்தனமான தாக்குதல் உடன் நிறுத்தப்படவேண்டும். தமிழ் மக்களுக்கு ஓர் நியாயமான அரசியல் தீர்வை முன் வைக்க வேண்டும். ''அரசியல் தீர்வு'' என்று உலக அரங்கை ஏமாற்றிக் கொண்டு மறுபக்கம் சிறிலங்கா அரசு அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கின்றது. பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை என்று மேலும் மேலும் பூச்சாண்டி காட்டக்கூடாது! ஒரு மாத கால அவகாசத்துள் முடிவு தெரிந்தாக வேண்டும்!

**—இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி—**
**(இந்தியாவிற்கான இலங்கை ஹைகமிசனர் பேர்னாடு திலகரத்னேயிடம்)**

- தமிழ் மக்கள் பெருவாரியாக வாழும் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் சதவிகித அளவை மாற்றும் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட சதி முயற்சி தொடரக்கூடாது.
- அப்பாவி மக்களின் படுகொலையைப்பற்றி ஆராய சுயேச்சையான விசாரணைக் கமிசன் அமைக் கப்படவேண்டும்.
- இலங்கையில் வாழும் எந்தவொரு தமிழரும் இந்தியாவைப் புகலிடமாகக் கொள்ள நினைக்கத் தேவையில்லாதவாறு இலங்கை அரசு தீர்வுக் குகந்த சூழ்நிலைகளை ஏறபடுத்த வேண்டும்.
- உயிர்தப்பி இந்தியா வந்துள்ளஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் அகதிகளும் இலங்கை திரும்புவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும்.
- அரசியல் தீர்வே தங்கள் நோக்கம் என வெளியே கூறிக் கொண்டு இராணுவத்தைக் கொண்டு மக்களைக் கொன்று குவிக்க சிறிலங்கா அரசு திட்ட மிடுகிறது.
- இனியும் இந்த விஷயத்தில் இழுத்தடிக்க இலங்கை அரசை அனுமதிக்க முடியாது.
- ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மூடி மறைக்க ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சிறிலங்கா அரசு அளவுக்கதிகமாகவே அள்ளி வீசுகிறது.
- ஜெனிவாவில் நடக்கும் ''மனித உரிமைக் கமிஷன்'' கூட்டத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தால் படுகொலை செய்யப்படும் விடயத்தைப் பற்றி வெட்டவெளிச்சமாக்க இந்திய பிரதிநிதி கோஷ்டிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**இந்திய வெளிவிவகார மந்திரி**
**ப. ஆர். பகத்**

- சிறிலங்கா அரசின் இராணுவத்தினரால் திட்ட மிடப்பட்ட முறையில் அப்பாவத் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும்; JRஇன் அரசியல் தீர்வு இழுத்தடிப்புக்கு எதிர்ப்பு தெரிவித் தும் ராஜ்ய சபையில் கவன ''ஈர்ப்புத் தீர்மானம்''.

**—எம். சி. பண்டாரே (இ. காங்)**

---

## சிறிலங்கா வெகுசன தொடர்பு சாதனங்களின் வெருட்டல்

அமெரிக்க CIA கொலைக் கருவிகளின் கைப்பிடியாகி அப்பாவி மக்களைக் கொன்று குவித்து ஏகாதிபத்தியதத்திற்கே உரித்தான காட்டுமிராண்டித் தனமான ஆயுத ரீதியான அடக்குமுறைகளில் தோல்வியைத் தழுவப் போகும் இக்கால கட்டத்தில். CIA, ''இஸ்ரேவல் மொசாட்'' கொலைக் கூலிப்பட்டாளங்களின் அனுபவ முதிர்ச்சி வழி வந்த **''உளவியல் ரீதியான போர்** முறைகளில் சிறிலங்கா இறங்கியுள்ளது.

தனது வெகுசனத் தொடர்பு சாதனங்களின் வெகு விமர்சையான பொய்ப் பிரச்சாரங்களையும், கட்டுக் கதைகளையும், புழுகு மூட்டைகளையும் கட்ட விழ்த்துள்ளது. என்ன இருந்தாலும் அது ''அரசு'' ஆக இருப்பதால் உலகளாவிய வெகுசனத தொடர்பு சாதனங்களைத் தன்னுள் அடக்கி வைத்திருப்பது தவர்க்க முடியாததொன்று.

இன்று விமானத் தாக்குதல் மூலமே தன் வீர சாகசங்களைக் கொட்டித் தீர்க்கும் சிறிலங்கா—இராணுவம் போராளிகளின் எந்தவொரு தாக்குதலிலும் ''விழுந்தும் மீசையில் மண்படவில்லை''. இப்படி ஜெயவர்த்தனாவின் வானொலியும், தொலைக்காட்சியும் அடிககடி அலறுகிறது.

www.tamilarangam.net

## நவகாலனித்துவ அரசின், நவபாசிச நசுக்கலில், ஈழ மக்கள் நிலை!

***ஜனவரி—1 :*** மட்டக்களப்பு நகரத்தில் இராணுவத்தினரால் மாணவர்கள் உட்பட 24 இளைஞர்கள்
கைது. □ மதவாச்சி—வவுனியா வீதியில் வட பகுதியிருந்து சென்ற தனியார் பஸ் ஒன்றை சிங்களக் காடையர்
இடை மறித்து உடைமைகள் சூறையாடல். □ மூதூரில் ஊர்காவல் படைக் குண்டர்களினால் 18 பேர் கைது
செய்யப்பட்டு இராணுவத்திடம் ஒப்படைப்பு. □ கனக புரத்தில் ஒரு ஆசிரியையும் 7 பெண்களும் இராணு
வத்தின் துப்பாக்கிச் சூட்டில் காயம்.

***ஜனவரி—2 :*** வட்டக்கச்சி, கனகபுரம் ஆகிய பகுதிகளை இராணுவம் சுற்றி வளைப்பு. அப் பகுதி
எங்கும் தொடர்ந்து குண்டு வெடிப்பு சத்தங்களும், துப்பாக்கி வேட் டொலிகளும் கேட்ட வண்ணமே
யிருந்தன. அப்பகுதி முற்றாகச் சோதனை. பொருட்கள் சூறையாடல். ஆறுமுக வசிகரன், 24 வயதுள்ள ஒரு
பெண் உட்பட 7 பேர் சுட்டுக் [கொல்லப்பட்டனர். □ மட்டுநகரில் ரோந்து சென்ற பொலிசாரை
போராளிகள் தாக்கி 4 பொலிசாரைக் கொன்றனர். காயம்பட்ட மீதிப் பொலிசார் உடனடியாக விமானம்
மூலம் கொழும்பு கொண்டு செல்லப் பட்டனர். □ கிளி நொச்சியில் 5 வது நாளான ரோந்து நடவடிக்கையின்
போது 8 பேர் கைது செய்யப்பட்டனர். ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டார். இருவர் காயம். □ திருமலை
நிலாவெளியில் 181 பேர் கைது. 41 பேர் விடுதலை. □ உருத்திர புரத்தில் ஒருவர் சுட்டுக் கொல்லப்
பட்டார். பலர் காயம்.

***ஜனவரி—3 :*** திருமலை—கோபாலபுரத்தில் ஒரு பெண் மூன்று குழந்தைகள் உட்பட 31 பேர்
இராணுவ வேட்டுக்குப் பலி. கிளி நொச்சி 8 ம் வாய்க்காலில் ராயட் அருள்தாசன் சுடப்பட்டார்.

***ஜனவரி—4 :*** யாழ் நகரில்—தரை மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும்; கவச வாகனம்,
ஹெலிகப்டர்களினால் ஒரு முஸ்லிம் பெண் உட்பட ஐந்து பேர் சுடப்பட்டனர். 9 பேருக்கு சிறிய காயம்
13 பேருக்கு படுகாயம். □ பொன்னாலை என்ற இடத்தில் 3 மீனவர்கள் சுடப் பட்டனர். மட்டுநகர்—செங்க
லடியில் சைக்கிளில் சென்ற 4 இளைஞர்கள் சுடப்பட்டனர்.

***ஜனவரி—5 :*** யாழ்—காலை 7.00 மணியளவில் இராணுவத்தினர் ஹெலிக் கொப்டர் மூலம் குண்டு
வீசியதில்; HNP, தபாற் கந்தோர், வீரசிங்கம் மண்டபம், கட்டிடங்கள் சேதம், 8 பேர் குண்டு வீச்சில்
கொல்லப் பட்டனர். இதில் 5 பேர் சுங்க இலாகாவில் வேலை செய்பவர்களாகும். சுமார் 75 பேர் காயப்
பட்டதில் 18 பேர் அளவில் படுகாயத்துக்குட்பட்டனர்.

### சுற்றி வளைப்பு! சூறையாடல்! கற்பழிப்பு!

***ஜனவரி—6:*** யாழ் நகரில்—இராணுவத்தின் ஹெலிக் கொப்டர் தாக்குதலில் 7 பேர் பலி. சுமார் 60 பேர்
காயம். ஆயுதப் படையினரின் தரை மார்க்கமான அட்டகாசத்தில் சுமார் 15 பேர் படுகாயம். பின்னர் பஸ்
நிலையத்தில் இருவரும், பண்ணை என்னுமிடத்தில் நால்வரும் சுடப்பட்டனர். திருகோணமலை சேருவிலை
தோப்பூர், முள்ளம் பேணிவத்த பகுதியில் 3 இளம் பெண்களை ராணுவம் கடத்திச் சென்றது. □ வவுனியா—
கண்டி வீதியில் விகாரைக்கு அண்மையில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட உருக்குலைந்த இரு
சடலங்கள் காணப்பட்டன.

***ஜனவரி—7 :*** நிலாவெளி 10 ம் கட்டை, இறங்கண்டி ஆகிய இடங்கள் சுற்றி வளைப்பு. 15 பேர்
சுட்டுக் கொல்லப் பட்டனர். சுமார் 235 பேர் கைது. இதில் 13 கவச வாகனங்களிலும் அரசு பஸ்களிலும்
சுமார் 1200 இராணுவத்தினர் முற்றுகையிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. □ கிளி நொச்சி—திரு
நகரில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இருவர் காயங்களுடன் உயிர் தப்பி ஓடி விட்டனர்.

***ஜனவரி—8 :*** கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு அரிசி ஏற்றிக் கொண்டு வந்த லொரி ஒன்று சிங்களக்
காடையர் கூட்டத்தினால் வழி மறிக்கப்பட்டு கொள்ளை. ஒரு முஸ்லீம் உட்பட அதிலிருந்த 8 தமிழர்கள்
என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை. □ கிளி நொச்சி—கணேச புரம் பகுதியில் சீலன் எனப்படும்
டேவிட் இராணுவத்திற்குப் பலியானார். பலர் மருத்துவ மனையில். □ யாழ்—பண்டத்தரிப்பில் மினி
பஸ் ஒன்றில் வந்து கொண்டிருந்தவர்களை நோக்கி இராணுவம் சுட்டதில் ஒரு இளம் பெண் பலி.
□ "குச்சவெளி இராணுவ முகாம் உடனடியாக அகற்றப்படவேண்டும்" என்று முஸ்லீம்கள் நடத்திய
ஆர்ப்பாட்டப் பேரணியில் பல முஸ்லீம்கள் அரச ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.
□ திருகோணமலை கோட்டை முகாமில் கைது செய்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களில் சண்முகம்,
ராஜன் என்பவர்கள் உட்பட எட்டுப் பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

***ஜனவரி 9 :*** முல்லைத்தீவில் ஆயுதப்படையினர் முற்றுகையிட்டு 500க்கும் மேலானவர்களைக் கைது
செய்தனர். 40 பேர் விசேட விசாரணைக்காக கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர்.

***ஜனவரி 10 :*** முல்லைத்தீவு, வண்ணான் குளம் என்னுமிடம் சுற்றி வளைக்கப்பட்டு 7 இளைஞர்கள்
கைது. ஓடிய இருவரில் ஒருவர் சுடப்பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழ மக்களின் இரத்தக் களம்!
# ஏகாதிபத்தியத்தின் இராணுவத் தளம்!

***ஜனவரி 11 :*** கிளிநொச்சி - உருத்திரபுரம், திருவையாறு, கனகபுரம், விஸ்வமடு, முரசு மோட்டை, வடக்கச்சி என்னுமிடங்கள் ஆயுதப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டை. 15 வீடுகள் தீக்கிரை. நகைகள் அபகரிப்பு, ஒரு மாணவி கற்பழிக்கப்பட்டாள். □ திருமலை-குச்சவெளி என்னுமிடத்தில் முஸ்லீம் வீடுகளில் சிங்கள இராணுவம் நடத்திய தகாத நடவடிக்கைகளைக் கண்டித்து முஸ்லீம் மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். ஊர்வலத்தில முக்கியஸ்தர்கள் கைது:

***ஜனவரி 12 :*** திருகோணமலை பிரஜைகள் குழுத்தலைவர் வீரசிங்கம், மோகனராஜா கைது. □மட்டக் களப்பு செங்கலடியில் தேடுதல் வேட்டையில் ஆணும் பெண்ணும் வயது வித்தியாசமின்றி சுமார் 60 பேர் கைது. □மட்டுநகர் சுற்றிவளைக்கப்பட்டு இருபது வயதுக்குட்பட்ட 15 இளைஞர்கள் கைது. □ வவுனியா-பாவற்குளத்தில் ஊர்க்காவல்படைக் குண்டர்களால் ஒரு வயோதிபர் சுட்டுக் கொல்லப்பட்டார். புளியங்குளம் என்னுமிடத்தில் ஒரு பஸ்ஸிலும்,லொரியிலும் சிவில் உடையில் வந்த இராணுவம் வீதியில் சென்ற நால்வரை நோக்கிச் சுட்டது. இருவர் மாண்டார்கள். இருவர் தப்பியோட்டம்.

***ஜனவரி 13:*** மட்டுநகர்-செங்கலடி கிராமத்தைச் சுற்றிவளைத்து மீண்டும் தேடுதல் வேட்டை. 40 அப்பாவி மக்கள் கைது. ஒருவர் வீட்டிற்குள்ளேயே வைத்துச் சுடப்பட்டார். □ தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்த கந்தையா, வேணுகுமார் (16), சுப்ரமணியம், சிவநேசன் (20), N. ரத்னகுமார் (23) ஆகியோர் இராணுவத்தினரால் சுடப்பட்டார்கள். □உடையார்கட்டு என்னு மிடத்தில் விடுதலைப் போராளிகள் இராணுவத்தை தாக்கியதில் ஒரு இராணுவம் பலி. மற்றுமொருவர் காயம். □மட்டக்களப்பு காத்தான்குடி பகுதிக்கு பஸ்ஸில் வந்திறங்கிய இராணுவம் அட்டகாசம். பலர் காயம். போக்குவரத்து பாதிப்பு. மக்கள் பதட்டம்.

## விசாரணை! வதை! படுகொலை!

***ஜனவரி 14 :*** வவுனியா—4 சிங்கள ஊர்க்காவல் படையினர் (B. விஜயவர்த்தனா, P. விஜயசேனா V. பியசேனா என்போர்) பால் விற்றுவிட்டு வீடு வந்த பரமநாதன் என்பவரைக் கொலைச் செய்து பணம் கொள்ளை.

***ஜனவரி 15 :*** மட்டக்களப்பு பொலிஸ் நிலைய மாடிக் கட்டிடத்திலிருந்து வீதியை நோக்கிப் பொலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 7 வயது நசீமா என்னும் சிறுமியும், ராஜா (30) என்பவரும் பலி. 15 பேர் காயத்துடன் உயிர் தப்பி ஓடினர்.

***ஜனவரி 16 :*** யாழ் கோட்டைக்குள்ளிருந்து வந்த இராணுவத்தினர் நகரத்துள் 4 முஸ்லீம்களை [(H M. கமீல்-மருதானை(40), யூசுப்-காத்தான்குடி(25), தமீம்-கடுகஸ்தோட்டை(22)] சுட்டுக் கொன்றனர். இராணுவத்தினரின் பீரங்கித் தாக்குதலினால் சுமார் 82 பேர் அளவில் காயமடைந்தனர். இதைத் தடுக்கும் நடவடிக்கையாக அங்கு விரைந்த போராளிகட்கும் சிறிலங்கா ஆயுதப் படையினருக்கும் ஏற்பட்ட மோதலில் மேலும் பலர் காயமடைந்தனர். □ திருகோணமலை-ஆலங்கேணியில் கடற்படை அதிகாரி ஒருவர் போராளிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். (இவர் 1984ம் ஆண்டு துப்பாக்கியால் சுடும்போட்டியில் ஜனாதிபதி பரிசையும் பாராட்டையும் பெற்றவர்.) □ பகல் 12-30 மணியளவில் யாழ் நோக்கி வந்த அரசு பஸ் ஒன்றை கண்டி வீதியில் வைத்து இராணுவத்தினர் வழி மறித்து தாயையும், தகப்பனையும் சுட்டுக் கொன்று விட்டு கல்லூரி மாணவியைக் கடத்திச் சென்றனர்.

***ஜனவரி 17 :*** இந்திய எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் கற்பிட்டி இராணுவத்தினரால் கைது. படகுகள் பறிமுதல். □ வாழைச்சேனையில் இராணுவம் சுட்டிச் சென்ற 4 இளைஞர்களின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. □ தலைமன்னார் கரையிலிருந்து படகொன்றில் மீன் பிடிக்கச் சென்ற 8 பேர் கைது.

***ஜனவரி 18 :*** தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து சோதனை வேட்டைக்காகப் புறப்பட்ட இராணுவத்தினர் முகாமிற்கு அண்மித்த பாலமொன்றில் கண்ணி வெடித் தாக்குதலில் சிதறினர். இதைத் தொடர்ந்து ஹெலிக்கொப்டர்கள் வரிசையாக வந்து அப்பகுதியில் குண்டு மழை பொழிந்தது. மேலிருந்து பீரங்கி குண்டுகள் போடப்பட்டன, பல மணிநேரம் நடைபெற்ற ஆகாயமார்க்கமான இத்தாக்கு தலில் 63 வீடுகள் முற்றாகச் சேதமுற்றன. பீதியுற்ற மக்கள் வீடுகளைவிட்டு வெளியேற்றம், உயிரிழப்புக்கள் பற்றி சரியாகத் தெரியவில்லை. 50க்கும் மேற்பட்டோர் காயமுற்றதாகத் தெரிகிறது. □ கல்முனை-நாவற் குடாவில் 9-30 மணியளவில் வீடுகளைச் சோதனையிடச் சென்ற இராணுவத்தினர் மீது இனந் தெரியாத நபர் களால் குண்டு வீச்சு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமெரிக்கச் செல்லப்பிள்ளையின் "குண்டு" விளையாட்டு!

**ஜனவரி 19 :** யாழ் அரசினர் ஆஸ்பத்திரிக்கு வெளி நோயாளர்கள் வருகை வரவரக் குறைந்துள்ளதாகவும், நோயாளர்கள் இராணுவத்தினரின் திடீர் அட்டகாசங்களுக்குப் பயந்து சிகிச்சைக்கு வரமுடியாமல் தவிப்பதாகவும் ஆஸ்பத்திரி உயர் அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

**ஜனவரி 20 :** போராளிகளின் கண்ணிவெடியில் சிக்கிச் சுக்குநூறான கவச வண்டிகளின் எண்ணிக்கையைச் சீர்படுத்தவும், இனித் தகர்க்கப்படப் போகும் எண்ணிக்கையை கருத்தில் கொண்டும் புதிய கனரக கவச வாகனங்கள் கொழும்பிலிருந்து கிளிநொச்சி இராணுவ முகாமிற்கு வந்து சேர்ந்தன.

**ஜனவரி 21 :** 9 முஸ்லீம் பெண்கள் கொலை. விபரம் தெரியவில்லை. மட்டக்களப்பு...இருதயபுரத்தில் ஒதுக்குப்புறமான ஓர் இடத்தில் கற்பழிக்கப்பட்ட நிலையில் 12 பெண்களின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

**ஜனவரி 22 :** தமிழ்-முஸ்லீம் மக்கள் மத்தியில் சிறிலங்கா அரசினால் திட்டமிடப்பட்ட ரீதியில் ஏற்படுத்தப்பட்ட இனப் பூசல்களைக் கண்டித்து "இனிமேலும் இப்படி ஏற்படாதிருக்க எல்லோரும் உண்மையை உணர வேண்டும்" எனக், கல்முனை—சம்மாந்துறை வீரமுனை, கெலிச்சமுனை ஆகிய இடங்களில் தமிழ் மக்கள்-முஸ்லீம் மக்கள் ஒற்றுமைக் கூட்டங்கள் நடைபெற்றன.

**ஜனவரி 23 :** வடமாராட்சிக் கடற்கரையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். படுகாயத்துடன் உயிர் பிழைத்த மற்றொருவர் இறந்துவிட்டதாக நினைத்து இராணுவம் விட்டுச் சென்றது. □ வவுனியா குருமன் காட்டுச் சந்திப் பகுதியில் மாலை 4-00 மணி முதல் இரவு 9-00 மணிவரை இராணுவம் கடும் சோதனை. மக்கள் வீடுகளைவிட்டுக் காடுகளுக்குள் ஓட்டம். தெல்லிப்பளையில் இராணுவத்தினரும், போராளிகளும் ஒருவருக்கொருவர் கடும் சமர். இது 5 மணி நேரம் நீடித்தது. ஒரு இராணுவக் கோபரல் கொல்லப்பட்டார். □ பாலாலி விமான நிலைய 2 ஆசனங்களைக் கொண்ட விமானம் ஒன்று போராளிகளினால் சேதமாக்கப் பட்டுள்ளது. □ முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் பாலம் ஒன்று இராணுவத்தினரால் பழுது பார்க்கப்பட்டுக் கொண்டிருந்த வேளை 'லெப்டினண்ட்' ஒருவர் போராளிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். □ திருமலை கடற்கரையில் கைகள் கட்டப்பட்ட நிலையில் சடலமொன்று கரையொதுங்கியது. இவர் விசாரணைக்காக இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப் பட்டவர் எனத் தெரியவருகிறது.

## விமானத் தாக்குதல்! வீடுகள் எரிப்பு!

**ஜனவரி 25 :** பிற்பகல் 2-00 மணியளவில் கிளிநொச்சி புகையிரத நிலையத்துள் திடீரெனப் புகுந்த இராணுவத்தினர் அங்கு கூடி நின்ற பொதுமக்களில் 28 பேரை இயந்திரத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். பின்னர் இரயில் நிலைய அறையொன்றில் புகுந்த அவர்கள் அங்கு நின்ற 10 பேரின் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்து "பயங்கரவாதிகள் சுட்டதாகக்கூறும்படி கூறி ஆஸ்பத்திரியில் போட்டுவிட்டுச் சென்றனர். இவர்கள் மலையக கலவரங்களால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சியில் வந்து குடியேறிய இந்திய வம்சாவளித் தமிழர்களே!

**ஜனவரி 26 :** பட்டிருப்புத் தொகுதியைச் சுற்றி வளைத்த இராணுவத்தினரால் 14க்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட சுமார் 400 இளைஞர்கள் கைது □ மூதூரில் போராளிகளினால் இராணுவ வாகனம் முற்றாகச் சேதம். 5 இராணுவம் பலி. □ மட்டக்களப்பு—வெல்லாவெளிப் பிரதேசம் மீதான தாக்குதலில் பொலீஸ் நிலையக் கட்டிடம் சேதம். பொலீசார் அதனுள் கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம். □ மன்னார்—தந்திரிமலை என்ற இடத்தில் 7 இராணுவம் கொல்லப்பட்டனர்.

**ஜனவரி 27 :** மூதூர்-கட்டைபறிச்சான் என்னுமிடத்தில் ஆயுதப் படையினருக்கும் போராளிகட்கும் சுமார் 3 மணிநேரம் துப்பாக்கிச் சண்டை நடந்தது. திருநகரில் திடீரென வந்திறங்கிய இராணுவம் சுட்டதில் 28 பேர் காயம். கனகராயன், புதுக்குளம் பகுதியில் தோட்டத்தில் காவலுக்கிருந்த தர்மலிங்கம், லிங்கேஸ்வரன் (25) நடேசன், விநாயகமூர்த்தி(31) கனகலிங்கம், குலேந்திரன்(28) ஆகியோர் இராணுவத்தினரால் தாறுமாறாக அடிக்கப்பட்டு பிடித்துச் செல்லப்பட்டனர். □ மட்டக்களப்பு—வாழைச்சேனையில் கண்ணி வெடியில் இரு அதிரடிப்படை அதிகாரிகள் காலி.

**பெப்ரவரி 04 :** மட்டக்களப்பு — அமிர்தகழி, கூத்தாவாடி காலனி ஆகிய பகுதிகளில் முகமூடி நபர்களைப் பாவித்து நான்கு மணி நேர தேடுதல் வேட்டையில் 62 பேர் கைது. உயிர் தப்பியோடிய யேசு என்னும் 13 வயது மாணவன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

**பெப்ரவரி 05 :** முல்லைத்தீவில் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்களை இராணுவத்தினர் ஹெலிக்கெப்டரில் இருந்து சுட்டுக் கொன்றனர். ஏனையவர்கள் காயங்களுடன், கடலில் பாய்ந்து விட்டனர். அவர்கள் கரை சேர்ந்த விபரங்கள் இதுவரை தெரியவில்லை. □ இன்று அதிகாலை இரண்டு மணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து பரந்தனுக்கு ஒரு பஸ்ஸிலும், லொரியிலும் வந்த இராணுவத்தினர் தருமபுரத்தில் வீதியில சென்ற இருவரைச் சுட்டுக் கொன்றனர்: பின்னர் இவ்வழியாக 13 கவச வண்டிகள் சென்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அந்நியன் ஆட்சியின் செந்நீர்க் காட்சிகள்!

**பெப்ரவரி 06 :** பருத்தித்துறை—வடஇந்துக் கல்லூரி முன்; இராணுவ முகாமிற்குள்ளிருந்து ஏவப்பட்ட பீரங்கி குண்டு ஒன்று வீழ்ந்து வெடித்ததில் ஒரு பாடசாலை சிறுமி, இருபெண்கள் உட்பட 7 பேர் பலி. 15 பேர் படுகாயம். இவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**பெப்ரவரி 09:** யாழ்ப்பாணத்திலிருந்து சிலாபம் நோக்கிச் சென்ற 3 பேரும் வர்த்தகர்களை வவுனியாவுக்கு அண்மையில் கொக்குவெளி என்னுமிடத்தில் சிங்கள ஊர்காவல் படையினர் வழி மறித்து பொருட்கள் கொள்ளை. அவர்கள் உயிருடன் எரிப்பு.

**பெப்ரவரி 10 :** யாழ்—சுன்னாகம், மல்லாகம், புன்னாலைக் கட்டுவன், ஏழாலை, இணுவில், உடுவில் கந்தரோடை, குப்பிளான் போன்ற இடங்களிலுள்ள மக்களும், விழிப்புக் குழுக்களும் ஒன்றிணைந்து எழுச்சி மிக்க ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தனர். இதில் ஆசிரியர்களும், மாணவர்களும், இளைஞர்களும் அதிகளவில் பங்குபற்றினர் ; இவ்வூர்வலம் குப்பிழானிலிருந்து ஆரம்பமானது.

**பெப்ரவரி 11 :** மட்டக்களப்பு — வாழைச்சேனை கல்குடா வீதியில் காலை 10-30 மணியளவில் போராளிகளின் கண்ணி வெடி ஒன்று வெடித்ததினால் 6 பொலீஸ் கமாண்டோக்கள் கால் கைகளை இழக்கக் கூடிய வகையில் படுகாயம் அடைந்தனர். இருவர் கவலைக்கிடம் எனச் செய்தி கிடைத்தது. இதன்பின் அங்கு வந்த பொலீஸ் படை மாட்டு வண்டியில் சென்று கொண்டிருந்த இரு வயோதிபர்களைச் சுட்டுக் கொன்றது.

**பெப்ரவரி 13 :** நண்பகல் 2-30 மணி அளவில் வவுனியா பூவரசம் குளம் பகுதியில் வந்திறங்கிய **''பாக்கிஸ்தான் பயிற்சி கறுப்புச் சீருடை அதிரடிப் படையினர்''** திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 6 பேர் கொல்லப்பட்டனர். 92 வயதுடைய சிங்களவர் ஒருவரும் கொல்லப்பட்டார். பலருக்குப் படுகாயம். □ குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளில் ஹெலிகொப்டர் மூலம் குண்டு வீச்சு. 7 வீடுகள் சேதம். அப்பகுதி மக்கள் காயங்களுடன் அயல் கிராமங்களில் தஞ்சம். ○ திருகோணமலை-குச்சவெளி புடவைக் கட்டுப்பகுதியில் கால்நடைபவனியாக வந்த சுமார் 100 இராணுவத்தினரை எதிர்த்துப் போராளிகள் தாக்கினர். நீண்டநேரம் குண்டு வெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டொலிகளும் கேட்ட வண்ணமேயிருந்தன. இத்தாக்குதல் பற்றிய விவரம் தெரியவில்லை.

### சொந்த மண்ணிலேயே வெந்து மடியும் மனிதர்கள்!
### சுதந்திரம் தந்திடும் புரட்சியின் சாட்சிகள்!

**பெப்ரவரி 14 :** கிளிநொச்சி—தமிழ்ப்போராளி எனச் சந்தேகிக்கப்பட்ட ஒருவரின் வீட்டுக்குச்சென்று இராணுவத்தினர் அவரின் தாய், தகப்பன் சகோதரர்களைப் படுமோசமாகத் தாக்கிவிட்டுச் சென்றனர். □ யாழ்ப்பாணத்திலிருந்து '' பென்சன் '' வாங்குவதற்காக மினி பஸ்சில் செலறவர்கள்மீது வழியில் வந்த ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் மூவர் உயிரிழந்தனர்.

**பெப்ரவரி 15 :** பகல் ஒரு மணியளவில் புன்னாலைக் கட்டுவன் பகுதிக்கு ஹெலிக்கொப்டரில் வந்த ஆகாயப்படையினர் பல வீடுகளைக் குண்டு வீசித் தாக்கினர். இடிந்து விழுந்த வீட்டுக் கூரையின் இடிபாடுகளில் உயிர்தப்பி கைக்குழந்தையுடன் வெளியே ஓடிய பெண் சுட்டுக்கொல்லப்பட்டார். குண்டு படாமல் குழந்தையை அணைத்தவாறு சல்லடையாக்கப்பட்ட உடலோடு அத்தாய் குப்புற வீழ்ந்து கிடந்தாள். உயிர் பிழைத்த குழந்தையை அயலவர்கள் எடுத்துச் சென்றனர்.

**பெப்ரவரி 16 :** எழுதுமட்டுவாழ் பகுதியில் மினிபஸ்சில் சென்று கொண்டிருந்த பொது மக்கள்மீது ஹெலிகொப்டரிலிருந்து இராணுவத்தினர் தாக்கியதில் கார் சாரதி வேலாயுதம், சிவராசா என்பவர்கள்உட்பட ஒரு பெண்ணும் குழந்தையும் பலி. பலருக்குக் காயம். □ முகமாலை என்னும் இடத்தில் ஹெலிகொப்டர் ஒன்று சரமாரியாகச் சுட்டதில் இருவர் காயம். வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்,

**பெப்ரவரி 17 :** பரந்தனில் 7 இளைஞர்கள் கைது. கடைகள் தீக்கிரை. மக்கள் பதட்டம். □ மன்னாரில் இராணுவத்தினரால் 9ம் திகதி கைது செய்யப்பட்ட 20 இளைஞர்களில் 15பேர் விசேட விசாரணைக்காகப் 'பூசா' இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். □ பருத்தித்துறைப் பகுதியில் மருதங்கேணி என்னுமிடத்தில் ஹெலிகொப்டரின் 15 மணி நேரத் தொடர்ச்சியான குண்டு வீச்சு, இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகங்களில் ஒரு இளைஞர் பலி. 9 பேர் படுகாயம்.

**பெப்ரவரி 19 :** மட்டக்களப்பு-இருதயபுரம் பகுதிகளில் இராணுவத்தினரின் அடாவடித்தனங்களைக் கண்டித்தும், நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களைக் கைது செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அப்பகுதி முழுவதும் பூரணகர்த்தால். □ கழுவாஞ்சிக்குடி-மாங்காடு என்னுமிடத்தில் இராணுவத்தினரின் திடீர் துப்பாக்கிப் பிரயோகம். மக்கள் பீதி. □ மட்டக்களப்பு- ஆயத்திய மலையில் மோட்டார்சைக்கிளில் சென்ற இருவரை இராணுவம் சுற்றிவளைத்துப் பிடித்தபோது; ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தினிடையே உயிர்தப்பி ஓடிவிட்டார்; மற்றொருவர் 'சயனைட்' அருந்தி மரணமானார். இவர்கள் போராளிகளெனத் தெரிய வருகிறது. □ யாழ்-தாவடியில் ஹெலிகொப்டரிலிருந்து 2 குழந்தைகள் ஒரு பெண் உட்பட 6 பேர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பல வீடுகள் தீக்கிரை. படுகாயமுற்றுப் பின்னர் இறந்தவர்கள் விவரம் தெரியவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பெப்ரவரி 24 :** வவுனியா-கமலன் குளம் பகுதியில் ஹெலிகொப்டரிலிருந்து இராணுவம் தாக்குதல். இருவர் காயம். மக்கள் பாதுகாப்பிடங்களை நாடி ஓடினர்.

**பெப்ரவரி 25 :** முல்லைத்தீவு வைத்திய சாலைக்குச் சென்ற இருவரில் ஒருவர் சுட்டுக்கொல்லப் பட்டார். மற்றவர் படுகாயத்துடன் தப்பியோடினார். மற்றுமிருவர் கைது.

**பெப்ரவரி 26 :** மூதூர்-தெகிவத்த இராணுவ முகாமின் பொறுப்பாளரான லெப்ரினன் பெர்னான்டோ விடம் (வயது 35). அரிச்சந்திரா எனப்படும் சிப்பாய் தனக்கு "இங்கு வேலை செய்யமுடியாது பாதுகாப் பில்லை" என லீவு கேட்டார். அவர் மறுக்கவே சிப்பாய் 'லெப்டினண்டைச்' சுட்டுக் கொன்றார்.

**பெப்ரவரி 27 :** வடமாராட்சியில் வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, பொலிகண்டி, தொண்ட மானாறு ஆகிய பகுதிகளில் அரச பயங்கரவாத அடக்குமுறை நடவடிக்கைகளை எதிர்த்து கடையடைப்பு. கர்த்தால்.

**பெப்ரவரி 28 :** காலை 7-30 மணியளவில் தாவடி, சுதுமலை, மாதகல் ஆகிய பகுதிகளில் ஹெலி கொப்டர் மூலம் வீடுகள் தாக்கப்பட்டன. இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**வீதிகளிலும், வீடுகளிலும் சல்லடையாக்கப்பட்ட-எங்கள்**
**சகோதரர்கள் உடல்கள் மீது சத்தியம் செய்கின்றோம்!**
**கல்லறைகளை நெஞ்சத்தில் கட்டி வைக்கின்றோம்!**
**காலம் எழுதட்டும் சரித்திரத்தை!**

---


**"ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி" இன்**

**- புரட்சிப் பாடல்கள் -**



தென்றலும் சூடாகிப் போனது-
எங்கள் வீட்டு முன்றலில் பறந்த,
வெள்ளைப் புறாக்களில், ஏனிந்த இரத்தச் சிவப்பு!
ஓ......!
யுத்த விமானங்களின் குண்டுமழை நெரிசலில்,
உங்களுக்குச் சுதந்திரமாகப் பறக்க முடியவில்லையோ?

இப்படி, சரித்திரமாய்ப் போன சம்பவங்களை; உங்கள்
காதுகளுக்குத் தூது விடும் கானங்கள்!

தொடர்புகட்கு : EPIC. சென்னை-94 Phone : 422620


---

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்**

**- ஈழ வானொலி -**

உண்மைகளையும், நியாயங்களையும் கண்டு கிலி கொள்ளும் சிறிலங்கா அரசானது! பலகோடி செலவில் நவீன கருவிகளை இறக்குமதி, செய்து "ஈழ வானொலி' நிகழ்ச்சிகளைக் குழப்பிக் கொண்டிருக்கின்றது.

புதன்: சனி, பி. ப 3 மணி, இரவு 8-30 வியாழன்: பி. ப. 3 மணி ஞாயிறு: மு. ப. 10, பி. ப. 3 மணி

ஆகிய தினங்களில் சிற்றலை (SW) 1×2 'மீட்டர்) 7000 KH (கிலோஹேட்ஸ்) அலை வரிசையில் ஒலி பரப்பைக் கேட்கும்போது; இடது பக்கமாகவோ அல்லது வலது பக்கமாகவோ சற்று திருப்பி நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகக் கேட்கவும்!

---

**மக்களே வரலாற்றைப் படைப்பவர்கள்—EPRLF**

- இயக்கங்கள் ஆயுத இறுமாப்பில் மக்களைக் கருத்தில் கொள்ளாது செயற்படுகின்றன!
- தங்களையுமறியாது ஆயுத அராஜகம் தலைவிரித்தாடுகின்றது!
- மக்களே தீர்மானமான சக்திகள் என்பதை மறந்து செயற்படுகின்றன!
- இராணுவக் கெடுபிடிகளினால், இயக்கங்கள் தங்கள் அராஜக உள்ளடக்கத்தை; மக்கள் மத்தியில் மறைத்திருக்கின்றன!


துப்பாக்கிகளுக்கும், வேட்டொலிகளுக்கும் பழகிப்போன மக்கள் "**துப்பாக்கிகள் எம்மை என்ன செய்து விட முடியும்**" எனக் கேட்குமளவிற்குத் துணிந்துவிட்டார்கள். சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்! என்பது **ஈழ விடுதலைப் போரில் ஓர் திருப்புமுனை! மக்களே வரலாற்றைப் படைப்பவர்கள்** என்பதே நாம் கற்ற பாடம்!

இவ்வாறு "ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி" ஈழத்தில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் குறிப்பிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★★★★★★★★★★★★★★



மக்களைக் காக்க ஆயுதம் ஏந்திமோம்! - அதனால்
"மக்கள் விடுதலைப் படை" ஆனோம்!

# வெல்க! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம்!

PRINTED MATTER

★EPIC

20, First Street,
Zacaria Colony,
Choolaimedu,
MADRAS-600 094
Tel : 422620 (Post Bag : 5551)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செய்தி தொடர்பு நிறுவனமான
ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு

EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION

**EPIC : B. M. Box 1738, London WC1 N 3xx, UK.**
**EPIC : 10, Ruedes Martyrs, 75009 Paris, France.**
**EPIC : Kiehlufer-47, 1000 Berlin-44, W.Germany.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்